Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
FRIDAY, APRIL 07, 2023

வெள்ளிக்கிழமை ஏப்ரல் 07, 2023 | ஒளி: 08 கதிர்: 246 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

# தரவுகளை சேமிக்கவில்லை

வாட்ஸ்அப் மற்றும் ஃபேஸ்புக் கணக்குகள் தொடர்பான தரவுகளை சேமித்து கண்காணிப்பது மற்றும் தொலைபேசி அழைப்புகளை பதிவு செய்வது போன்ற நடவடிக்கைகளை பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்டு வருவதாக சமூக ஊடகங்களில் வெளியான செய்தியை பாதுகாப்பு அமைச்சு மறுத்துள்ளது.

அனைத்து தொலைபேசி உரையாடல்களையும் பதிவுசெய்து, அவற்றைச் சேமித்து, வட்ஸ்அப் மற்றும் ஃபேஸ்புக் அழைப்புகளைக் கண்காணிக்கும் செயல்முறை தற்போது நடந்து வருவதாக சமூக ஊடகங்களில் சில தரப்பினரால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது.



தொடர்ச்சி P2

# ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க ஐ.ம.ச எம்.பிக்கள் தயார்

## குழுவாக ஆதரவளிப்போம் என்கிறார் ராஜித



ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க தயாராக இருப்பதாக தெரிவித்த அக்கட்சியின் எம்.பியான ராஜித சேனாரத்ன, கட்சி தீர்மானம் எடுக்கத் தவறினால் குழுவாக ஆதரவளிக்க உள்ளதாகத் தெரிவித்தார்.

கொழும்பில் வியாழக்கிழமை (06) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம்:

# தடையால் தாமதமாகும்

## கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவிசாய்க்கும் என்கிறார் நீதியமைச்சர்



நீதிமன்ற விடுமுறை காரணமாக, பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் குறித்து நீதிமன்றத்துக்கு செல்வதற்கு உள்ள தடைகளை கருத்திற்கொண்டு, அதை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை இன்னும் சில வாரங்களுக்கு பிற்போட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர், கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார். தொடர்ச்சி P2

# நரகத்தில் இருந்து ஓர் இடைவேளை

இலங்கை, இப்போது பொருளாதார நெருக்கடியிலிருந்து ஓர் இடைவேளையைத் தான் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. அதாவது நரகத்திலிருந்து ஒரு இடைவேளை தான் இதுவென மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்தார்.

தற்போதைய சூழலை வைத்து இலங்கை பொருளாதார மறுமலர்ச்சியடைந்து முன்னோக்கிச் செல்கின்றது என மக்கள் நினைத்து விடக் கூடாது. மிகவும் மோசமான பொருளாதார வீழ்ச்சியை இலங்கை விரைவில் சந்திக்கும் என களுத்துறையில் வியாழக்கிழமை (06) நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு பேசியபோது அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# கோட்டாவுக்கு இணங்கத் தவறிய நிலையங்களுக்கு தற்காலிக பூட்டு

## சிபெட்கோ பௌசர்களுக்கு ஜிபிஎஸ்

தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர கியூஆர் கோட்டா முறைமைக்கு இணங்கத் தவறிய 40 எரிபொருள் நிரப்பு நிலையங்களின் சேவைகளை இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனையம் லிமிடெட் ஆகியவற்றின் முகாமைத்துவம் மற்றும் அதிகாரிகளுடன் வியாழக்கிழமை (06) காலை நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



# அரிசியைக் கண்ட ஆத்திரத்தில் மகளின் முகத்தை எரித்த தந்தை

**இவ்வளவு அரிசி எதற்காக சமைக்கின்றாய்?**

**முகத்துடன் சேர்த்து கன்னத்திலும் எரிகாயங்கள்**

அரிசி வெந்துகொண்டிருந்த போது, 'ரைஸ் குக்கர்' மூடியை எடுத்து தன்னுடைய 16 வயதான மகளின் முகத்தில் வைத்து எரிகாயங்களுக்கு உட்படுத்திய தந்தை தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பின்வத்த பொலிஸார் தெரிவித்தனர். தொடர்ச்சி P2



# வர்த்தமானியில் வெளியானது ஊழலுக்கு எதிரான சட்டமூலம்

ஊழலுக்கு எதிரான உத்தேச சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதுடன், ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு எதிரான மாநாட்டின் சில விதிகள் மற்றும் சர்வதேச அளவில் அங்கிகரிக்கப்பட்ட விதிமுறைகள், தரநிலைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளை நடைமுறைப்படுத்த இந்தச் சட்ட மூலம் முயல்கிறது.

தொடர்ச்சி P2



# 10க்கு முன்னர் உரத்தை பெற்றுக் கொள்ளுங்கள்

அரசாங்கத்தால் இலவசமாக வழங்கப்பட்ட சேற்று உரம் என்று அழைக்கப்படும் ரிஎஸ்பி (டிரிபிள் சுப்பர் பொஸ்பேட்) உரத்தை இதுவரை பெற்றுக்கொள்ளாத விவசாயிகள் ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்த கமநல சேவை நிலையங்களில் பெற்றுக்கொள்ளுமாறு விவசாய அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

## பொருளாதார மீட்சியடையும் நேரத்தில்

# தவறான அறிக்கைகளால் ஏமாற்றமடைய வேண்டாம்

## பொது மக்களுக்கு மத்திய வங்கி வலியுறுத்தல்

இலங்கை பொருளாதாரமானது வரலாற்றில் எதிர்கொண்டிருந்த மிகவும் மோசமான நெருக்கடியிலிருந்து பொருளாதார மீட்சியடைகின்ற இம்முக்கியமான தருணத்தில், வேண்டுமென்றோ அல்லது வேறுவிதமாகவோ வெளியிடப்படும் தவறான அறிக்கைகளால் பொதுமக்கள் ஏமாற்றமடைய வேண்டாமென இலங்கை மத்திய வங்கி பொதுமக்களை வலியுறுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2

# மணற்கேணி காணிகளை துப்புரவாக்க அனுமதி தாருங்கள்

ஆக்கிரமிப்பு முற்றுகைக்குள் இருக்கும் தமிழர்களின் பூர்வீக எல்லைக் கிராமங்களில் ஒன்றான, முல்லைத்தீவு - மணலாறு, மணற்கேணிப் பகுதிக்குரிய தமிழ் மக்கள் சிலர், மணற்கேணிப் பகுதியிலுள்ள தமது காணிகளை துப்புரவு செய்து விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதி தருமாறு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தைக் கோரியுள்ளனர்.

அந்தவகையில் மணற்கேணிப் பகுதி காணி உரிமையாளர்கள் சிலர் யாழ்ப்பாணத்திலிருந்து வருகைதந்து, முல்லைத்தீவு

தொடர்ச்சி P2

# களனிதிஸ்ஸ மின்நிலையத்தை கையகப்படுத்தியது இ.மி.ச

163 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் சொஜிட்ஸ் களனிதிஸ்ஸ அனல்மின் நிலையத்தை, தாம் கையகப்படுத்தி உள்ளதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



# கப்ராலுக்கு எதிரான முறைப்பாடு நிராகரிப்பு

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாட்டு மனுவை நிராகரிக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனாவெல, வியாழக்கிழமை (06) உத்தரவு பிறப்பித்தார்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சம்பத் மெண்டிஸால் முன்வைக்கப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனைகளை கருத்தில் கொண்டே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

# டயானாவை கைது செய்ய உத்தரவிடுவதா, இல்லையா?

## ஏப்ரல் 24 இல் தீர்மானம் அறிவிக்கப்படும்

பொய்யான தகவல்களை வழங்கி இலங்கை கடவுச்சீட்டை பெற்றுக்கொண்டார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவை கைது செய்யவதற்கான உத்தரவு பிறப்பிப்பதா, இல்லையா என்பது தொடர்பான தீர்மானம், ஏப்ரல் 24ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ், வியாழக்கிழமை (06) தெரிவித்தார்.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 32ஆவது பிரிவின் கீழ் டயானா கமகேவை கைது செய்வதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு மனுதாரர் விடுத்த கோரிக்கையை பரிசீலித்த பின்னரே நீதவான் மேற்குறிப்பிட்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# 'எக்ஸ்பிரஸ் பேர்ள்'க்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய 45 நாள்களே எஞ்சியுள்ளன

2021ஆம் ஆண்டு, இந்நாட்டின் கடற்பரப்பில் விபத்துக்கு உள்ளான 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பலில் எஞ்சியுள்ள பாகங்களுக்கு அருகில் சென்று ஆய்வு செய்து இழப்பீடுகளை மதிப்பீடு செய்வதற்கான மாதிரிகளைப் பெற்றுக் கொள்ள நிபுணத்துவக் குழுவுக்கு அவசியமான வசதிகளைப் பெற்றுக் கொடுக்குமாறு சுற்றாடல் பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மானப்பெரும, கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை (நாரா) ஆகியவற்றுக்கு அறிவித்தார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# தடையால் தாமதமாகும்

குறித்த சட்டமூலம் கடந்த 4ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையிலேயே சட்டமூலத்தை சமர்ப்பிப்பது தாமதிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் பல்வேறு சிவில் அமைப்புக்கள் விடுத்த கோரிக்கைகளுக்கு செவிசாய்க்கும் அரசாங்கம் என்ற வகையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இந்த சட்டமூலம், இம்மாத இறுதியில் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படும் என்று எதிர்ப்பார்ப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் என்ற புதிய சட்டமூலம் மார்ச் 23 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நிலையில், இது தற்போதைய 1979 ஆம் ஆண்டின் பபயங்கரவாதத் தடைச் சட்டத்தை திறம்பட நீக்கித் திருத்துஞ் சட்டமூலமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வாறாயினும், இந்த சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட காலத்திலிருந்தே சிவில் சமூகம் மற்றும் சட்ட நிபுணர்கள் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

குறித்த சட்டமூலம், நாட்டின் ஜனநாயகத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாக, எதிர்க்கட்சிகள், சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் பல்வேறு சிவில் மற்றும் வெகுஜன அமைப்புகள் ஏற்கெனவே எதிர்ப்பு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரசியலமைப்பின் 121வது பிரிவின் கீழ், சட்டமூலமொன்றை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்படின், நிலையியற் கட்டளை 55(2)ன் பிரகாரம் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்ட பின்னர், குறித்த சட்டமூலம் இரண்டாவது வாசிப்புக்கு நிர்ணயிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## தரவுகளை சேமிக்கவில்லை

அதற்கு பதிலளிக்கும் வகையில் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் சமூக ஊடகங்களில் பரவும் இதுபோன்ற செய்திகளுக்கு எந்த அடிப்படையும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது போன்ற தொலைபேசி உரையாடல்களை பதிவு செய்வதோ, தொலைபேசி அழைப்புகளை சேமித்து வைப்பதோ, வட்ஸ்அப் மற்றும் ஃபேஸ்புக் கணக்குகளை கண்காணிப்பதோ இல்லை என்றும் அமைச்சின் அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க ஐ.ம.ச எம்.பிக்கள் தயார்

யார் என்ன சொன்னாலும் ஹர்ஷ டி சில்வா போன்ற எம்.பிக்கள் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க தயாராக உள்ளனர் என்றும் குறிப்பிட்ட அவர், பலர் ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறார்கள் என்றும் அவருடன் தேர்தலில் போட்டியிட சற்று தயக்கம் காட்டுகின்றனர் என்றும் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தி தனித்துச் சென்றது கொள்ளை வேறுபாடுகளால் அல்ல என்றும் ரணில் விக்கிரமசிங்கவின் முடிவெடுக்கும் பாணியில் மகிழ்ச்சியடையாத காரணத்தால் என்றும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி நாட்டை சிறந்த நிலைக்கு கொண்டு வந்துள்ளார் என்ற கருத்து யதார்த்தமானது என்று குறிப்பிட்ட அவர், சுகாதாரத் துறை நெருக்கடி குறித்து ஜனாதிபதியுடன் பேசியுள்ளதாகவும் அதை சரி செய்யவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதாக அவர் உறுதியளித்துள்ளதாகவும் ராஜித எம்.பி தெரிவித்தார்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், இந்தச் சட்டத்தில் சாதகமான அம்சங்கள் இருப்பதாகவும் எனினும் சில திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

## கோட்டாவுக்கு இணங்கத் தவறிய நிலையங்களுக்கு தற்காலிக பூட்டு

எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தொடர்ச்சியாக கியூஆர் கோட்டா முறைமையை கடைப்பிடிக்கவில்லை என்று தெரிவித்த அமைச்சர், அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களும் குறைந்தபட்சம் 50 சதவீத எரிபொருள் தாங்கி கொள்ளளவை பராமரிக்க வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஏப்ரல் 15 ஆம் திகதிக்குள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான அனைத்து எரிபொருள் பௌசர்களுக்கும் ஜிபிஎஸ் கண்காணிப்பு அமைப்புகள் பொருத்தப்படும் என்றும் அதற்கு பின்னர், அனைத்து தனியார் பௌசர்களுக்கும் ஜிபிஎஸ் கண்காணிப்பு அமைப்பு பொருத்தப்படும் என்றார்.

## அரிசியைக் கண்ட ஆத்திரத்தில் மகளின் முகத்தை எரித்த தந்தை

பின்வத்த வடுபாசல்வத்த பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயதான சிறுமி தன் தாயாருடன் பொலிஸ் நிலையத்துக்கு வந்து செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

முகத்தில் எரி காயங்களுடன் ந்த பாதிக்கப்பட்ட சிறுமியும் தாயும் புதன்கிழமை (05) இரவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து சிகிச்சைக்காக பாணந்துறை ஆதார வைத்தியசாலைக்கு சிறுமி அனுப்பி வைக்கப்பட்டனர்.

சம்பவ தினத்தன்று இரவு 7.45 மணியளவில் சிறுமி சோறு சமைத்துக் கொண்டிருக்கும் போது சிறுமியின் தாய் அருகிலுள்ள கடைக்குச் சென்றுள்ளார். அவ் வேளையில் சந்தேக நபரான சிறுமியின் தந்தை வீட்டிற்கு வந்துள்ளார்.

அப்போது ரயிஸ் குக்கரை திறந்து பார்த்த சந்தேக நபர் இவ்வளவு அரிசி எதற்காக சமைக்கின்றாய் எனக் கேட்டு ஆத்திரமடைந்து, ரயிஸ் குக்கர் மூடியை எடுத்து தன் முகத்தில் வைத்து அழுத்தியதாக சிறுமி தெரிவித்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

முகத்துடன் சேர்த்து கன்னத்திலும் எரிகாயங்கள் இருந்ததால் சிறுமி உடனடியாக வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

சந்தேக நபரை கைது செய்ய பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக தலைமை பொலிஸ் பரிசோதகர் பத்மா நந்தன தெரிவித்தார்.

## தவறான அறிக்கைகளால் ஏமாற்றமடைய வேண்டாம்

அண்மையில் நிகழ்ந்த ஊடக சந்திப்பொன்றினைத் தொடர்ந்து மத்திய வங்கியின் ஆளுநரினால் வெளியிடப்பட்ட கருத்துக்கள் தொடர்பிலான தவறான அறிக்கையிடலை தெளிவுபடுத்த விரும்புவதாக தெரிவித்து இலங்கை மத்திய வங்கி அறிக்கை ஒன்றை வியாழக்கிழமை (06) வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது, அத்தகைய ஊடக அறிக்கைகள் 'பொருளாதாரத்தில் கடினமானதொரு காலகட்டத்தினை ஆளுநர் எதிர்பார்க்கின்றார்' எனக் குறிப்பிட்டிருந்தன.

எதிர்பார்க்கப்படுகின்ற சீர்திருத்தங்கள் தாமதமானாலோ அல்லது தடம்புரள்வினை எதிர்கொண்டாலோ எதிர்வருகின்ற காலப்பகுதியில் பொருளாதாரம் எதிர்கொள்ளக்கூடிய சவால்கள் குறித்த கலந்துரையாடலின் பின்னணியில் ஆளுநரினால் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்களிற்கு ஒட்டுமொத்தமாகத் தவறான பொருட்கோடலாக இது காணப்படுகின்றது.

2022இல் காணப்பட்ட முன்னெப்பொழுதுமில்லாத சமூக-பொருளாதார பதற்றங்களுடன் ஒப்பிடுகையில் அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட கடினமானதும் வேதனையளிக்கின்றதுமான கொள்கைசார் வழிமுறைகள் பொருளாதார நிலைமைகளை உறுதிப்படுத்துவதற்குத் துணைபுரிந்துள்ளதாக ஆளுநர் தெரிவித்தார்.

இச்சீர்திருத்தங்கள் அண்மித்த காலத்தில் மக்களுக்கும் வியாபாரங்களுக்கும் இன்னல்களை ஏற்படுத்துகின்ற சீராக்கச் செலவுகளைத் தோற்றுவித்துள்ள போதிலும், உறுதிப்பாட்டினை மீட்டெடுப்பதற்கு அவை அவசியமாயிருந்ததுடன் எதிர்வருகின்ற காலப்பகுதியில் மக்களுக்கும் வியாபாரங்களுக்கும் நன்மைகளைப் பெற்றுத்தரும்.

## மணற்கேணி காணிகளைத் துப்புரவாக்க அனுமதி தாருங்கள்

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கனகசபாபதி கனகேஸ்வரனை வியாழக்கிழமை (06) சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

அந்த கலந்துரை யாடலின் போதே குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் கரைதுறைப்பற்று பிரதேசசெயலகம் ஊடாக, காணி ஆவணங்களைச் சமர்ப்பித்து, காணிகளைத் துப்புரவு செய்வதற்குரிய கோரிக்கையினை மாவட்டசெயலகத்திற்கு வழங்கும்போது, அதற்குரிய அனுமதியை விரைவாக வழங்க முடியுமென முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக மணலாறு - மணற்கேணி கிராமம் என்பது, தமிழர் தாயகப் பிரதேசமான வடக்கையும் கிழக்கையும் ஊடறுத்துப் பாய்கின்ற பறையன் ஆற்றிற்கு அருகே அமைந்துள்ள வடக்கிற்குரிய, தமிழர்களின் பூர்வீக எல்லைக் கிராமமாகும்.

சிங்கள பௌத்த ஆக்கிரமிப்புக்கள் மிகத் தீவிரமாக முனைப்புப் பெற்றுள்ளன.

## கப்ராலுக்கு எதிரான முறைப்பாடு நிராகரிப்பு

குற்றச்சாட்டுகளை ஆதரிப்பதற்கு போதிய ஆதாரங்கள் இல்லாத காரணத்தினாலும், இதே போன்ற குற்றச்சாட்டுகள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது என்பதன் அடிப்படையிலான உண்மைகளை மறைத்ததாலும் வழக்கை முன்னெடுப்பதை சவால் செய்யும் பூர்வாங்க ஆட்சேபனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரின் தீர்மானங்களினால் நாட்டில் தற்போதைய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறி கீர்த்தி தென்னகோன் அவருக்கு எதிராக தனிப்பட்ட முறைப்பாடு செய்திருந்தார்.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 136(1)(அ) பிரிவின் கீழ், தென் மாகாண முன்னாள் ஆளுநர் ரஜித் கீர்த்தி தென்னகோனினால் தாக்கல் செய்த தனிப்பட்ட முறைப்பாட்டில் 500 மில்லியன் அமெரிக்க டொலர் இறையாண்மை பத்திரத்தை செலுத்த நடவடிக்கை எடுத்ததில் இருந்து நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு கப்ரால் தான் காரணம் என்று சுட்டிக்காட்டியிருந்தார்.

## களனிதிஸ்ஸ மின்நிலையத்தை...

வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனமான சொஜிட்ஸ் களனிதிஸ்ஸவினால் இயக்கப்பட்டு வந்த 163 மெகாவோட் சுழற்சி மின் நிலையம் மார்ச் 28 ஆம் திகதி கையகப்படுத்தப்பட்டதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபையின் சொந்த மின் நிலையத் திறனை 163 மெகாவோட்டால் அதிகரிக்கச் செய்துள்ளதாக சபை குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாக பொருளாதார தடைகள் காரணமாக சவால்கள் மற்றும் சட்ட அம்சங்கள் உட்பட பல சிக்கல்கள் மின்சார சபையின் பேச்சுவார்த்தைகள் மிகவும் கடினமாக இருந்த போதும் சபை அதை சமாளித்து ஒருங்கிணைந்த சுழற்சி மின் நிலையத்தை வெ ற்றிகரமாக கையகப்படுத்தியுள்ளது.

## 10க்கு முன்னர் உரத்தை பெற்றுக் கொள்ளுங்கள்

ஏப்ரல் 10ஆம் திகதிக்குப் பின்னர் கமநல சேவை நிலையங்களில் உள்ள அனைத்து சேற்று உர தொகுதிகளும் பிரதான களஞ்சியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது. லங்கா உர நிறுவனம் மற்றும் கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம் ஆகியவை இணைந்து நாடு முழுவதிலும் உள்ள கமநல சேவை நிலையங்களுக்கு 36 ஆயிரம் மெற்றிக் தொன் ரிஎஸ்பி உர தொகுதிகளை விநியோகித்துள்ளன.

விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கைக்கான இலவச உரம் வழங்கும் நடவடிக்கை தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கு சொந்தமான இரண்டு உர நிறுவனங்கள் மற்றும் விவசாய அபிவிருத்தி திணைக்களத்திடம் ரிஎஸ்பி உரம் மற்றும் ஏனைய உரங்களின் விநியோகத்தின் முன்னேற்றம் குறித்தும் அமைச்சர் கேட்டறிந்துள்ளார்.

6 இலட்சத்து 77 ஆயிரத்து 139 விவசாயிகள் 22 ஆயிரத்து 644 மெற்றிக் தொன் உரத்தை பெரும் போகத்தில் இலவசமாகப் பெற்றுள்ளதாக விவசாய அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## நரகத்தில் இருந்து ஓர் இடைவேளை

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாங்கள் இப்போது ஓர் இடைவேளையைத் தான் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். நாடு பொருளாதார நெருக்கடியிலிருந்து வெளிவரப் போகின்றது என யாராவது நினைத்தால் அது தவறு. இது ஓர் இடைவேளைதான். நாடு சரியான திசையில் கொண்டு செல்லப்படாததால் ஏற்கெனவே அனுபவித்ததை விட மிகவும் மோசமான நிலைக்கு நாம் திரும்புவோம் என அவர் தெரிவித்தார்.

1971 ஆம் ஆண்டிற்கு பின் உற்பத்திப் பொருளதாரத்தை மேம்படுத்தாமல் பொருளாதார சொத்துக்களைப் பெறாமல் இலங்கையின் செலவுகள் அதிகரித்ததால் இந்த நெருக்கடிக்கு இப்போது முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

பொருளாதார வளங்களை பெருக்குதல் மற்றும் உற்பத்திப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்குப் பதிலாக நாங்கள் கடன்களைப் பெற்றும் எமது வளங்களை விற்றுக் கொண்டும் இருந்தோம். நாங்கள் இப்போது ஒரு கடனாளி நாடாக இருக்கின்றோம். ஒவ்வொருவர் மீதும் ரூ.1.4 மில்லியன் கடன் தொகை உள்ளது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து வெளிவர IMFஇடமிருந்து கடன் பெறும் அதே பழைய வழியைத் தான் ரணிலின் அரசாங்கமும் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கமும் தேர்ந்தெடுத்துள்ளது. நாடு ஏற்கனவே கடனால் தான் பொருளாதார நெருக்கடிக்குத் தள்ளப்பட்டது. அதற்கு தீர்வாக அரசாங்கம் மீண்டும் கடனைத் தான் பெற்றுள்ளது என்று மேலும் தெரிவித்தார்.

உற்பத்திப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் கடன்களைப் பெறுவதைத் தவிர்த்து வளங்களைப் பெருக்கும் வழியைப் பின்பற்றுவதைத் தவிர இலங்கையை இந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்க எவராலும் முடியாது என சில்வா வலியுறுத்தினார்.

## வர்த்தமானியில் வெளியானது ஊழலுக்கு எதிரான சட்டமூலம்

இலஞ்சம், ஊழல் மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய குற்றங்கள் தொடர்பான குற்றச் சாட்டுகளை கண்டறியவும் விசாரணை செய்யவும் வழக்கு தொடரவும் சுயாதீன ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிப்பதற்கான சந்தர்ப்பம் இதனூடாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இலஞ்சம், ஊழல் மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மற்றும் ஏனைய தொடர்புடைய குற்றங்கள் பற்றிய அறிவிப்பு தொடர்பான குற்றங்களுக்கான நிறுவனத்தை வழிநடத்தவும் வழக்குகளை நிறுவவும் சட்டமூலம் முயல்கிறது.

## டயானாவை கைது செய்ய...

டயானா கமகே இரட்டைக் குடியுரிமை அந்தஸ்து இல்லாமல் இலங்கையில் வசிக்கும் பிரித்தானியப் பிரஜை என்றும் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கு பொய்யான தகவல்களை வழங்கி இலங்கை கடவுச்சீட்டை பெற்றுக்கொண்டதாகவும் தெரிவித்து சமூக ஆர்வலர் ஓஷல ஹேரத் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் சீ.ஐ.டியினர் விசாரணைகளை ஆரம்பித்ததுடன் பிரதான நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த நபர் அப்பட்டமான குற்றத்தை செய்துள்ளார் என்பது இதுவரை நடந்த விசாரணைகளில் இருந்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பில் நீதிமன்றில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி ரியென்சி அர்சகுலரத்ன மன்றுக்கு அண்மையில் அறிவித்திருந்தார்.

## 'எக்ஸ்பிரஸ் பேர்ள்'க்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய...

கப்பலுக்கு அருகில் அல்லது கப்பலுக்குள் செல்வதற்கு முடியாமல் இருப்பது சுற்றாடலுக்கு ஏற்பட்ட சேதத்தை அளவிடுவதற்கு தடையாக இருப்பதாக சுற்றாடல் மற்றும் ஏனைய சேதங்களின் முழு அளவை கணக்கிடுவதற்கு நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் உறுப்பினர்கள் இங்கு குறிப்பிட்டனர்.

ஆபத்தானது எனக் காண்பித்து கப்பலுக்கு அருகில் செல்வது தடுக்கப்பட்டாலும், கடற்படையினர் மற்றும் விமானப்படையினரின் ஒத்துழைப்பைப் பெற்று வசதிகளை ஏற்படுத்திக் கொண்டிருக்க வேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். இதற்கமைய கப்பலுக்கு அருகில் சென்று இதற்கான மாதிரிகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பது நஷ்டஈடு கோரி தாக்கல் செய்யப்படும் வழக்கிற்குப் பாதிப்பாக அமையலாம் என்பதால் இதற்கான வசதிகளை விரைவில் ஏற்படுத்திக் கொடுக்குமாறு கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை ஆகியவற்றுக்கு குழுவின் தலைவர் பணிப்புரை விடுத்தார்.

குறித்த கப்பலுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.



சிலுவையில் அறையப்பட்ட

# கிறிஸ்துவின் காயங்கள் உணர்த்தும் உண்மைகள்

## இன்று பெரிய வெள்ளிக்கிமையாகும்

மனிதன் பாவத்தில் இருந்து விடுதலை பெற வேண்டும்; தூய்மையான வாழ்வு வாழ வேண்டும் என்பதற்காக இயேசு கிறிஸ்து சிலுவை மரணத்தை தேர்ந்தெடுத்தார். அவமானத்தின் சின்னம் என்று கருதப்பட்ட சிலுவையை, இறை வல்லமையை வெளிப்படுத்தும் கருவியாக இயேசு கிறிஸ்து மாற்றினார். சிலுவையில் சிந்தப்பட்ட இரத்தத்தால் மனித குலத்தை அழிவில் இருந்து காப்பாற்றினார் இயேசு கிறிஸ்து.

பாடுகள் இன்றி உயிர்ப்பில்லை என்பதை உணர்த்துவதற்கு, துன்புறும் மனிதராய் இயேசு எவ்வாறு நடத்தப்பட்டார் என்பதை இறை வார்த்தைகளின் ஊடாக நாம் அறிகின்றோம். இதனூடாக சோதனைக்குப் பின்தான் சாதனை என்பதையும் சாவுக்குப் பின்னர் தான் வாழ்வு என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

“சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவின் நீட்டிய கரங்களில் உங்கள் கண்களை நிலை நிறுத்துங்கள். நீங்கள் மீண்டும் மீண்டும் மீட்கப்படுவதற்கு உங்களை அனுமதியுங்கள். பாவ அறிக்கை செய்யும் போது உங்கள் குற்றங்களிலிருந்து விடுவிக்கும் அவரது கருணையை உறுதியாக நம்புங்கள். பேரன்போடு உங்கள் மீது ஊற்றப்பட்ட அவரது இரத்தத்தை தியானித்து, அது உங்களைத் தூய்மையாக்க அனுமதியுங்கள். இவ்வாறு நீங்கள் எப்போதும் புதிதாகப் பிறக்க முடியும்” (எண் 123)

தமக்கென சேர்த்து வைக்காமல் எல்லாரோடும் பகிர்ந்து கொள்ள வேண்டியதே செல்வம். பாஸ்கா மறைபொருள் நம் வாழ்வின் மையம் என்பது எம்முடன் வாழும் கருவில் இருப்போர் முதல் முதியோர் வரை வாழ்வில் பல்வேறு துன்பங்களைச் சுமந்து வாழ்வோர், பல்வேறு வன்முறைகளுக்கு உட்படுவோர், சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவின் காயங்கள் உணர்த்தும் வலிகளை உணர்ந்து, அவரது இரக்கத்தை பெறுதல்வேண்டும்.

கல்லைப் புரட்டுங்கள், அதனுள் உள்ளவை அனைத்தையும் என்னிடம் நம்பிக்கையுடன் அச்சமின்றித்தாருங்கள்; நான் உங்களுடன் உள்ளேன்; உங்களை வாழவைப்பேன் என, நம் ஒவ்வொருவரிடமும் இயேசு கூறுகிறார்.

நாம் பலவேளைகளில் எழும்பி நடக்கும் சக்தியின்றி மனம் தளர்ந்திருக்கிறோம். ஆனால், நாம் நடந்து முன்னேறிச் செல்லவேண்டும் என ஊக்கமளித்து, நான் உன்னுடன் இருக்கிறேன் என இயேசு நம் ஒவ்வொருவரையும் நோக்கிக் கூறுகிறார்.

நம்பிக்கையின்மை, அச்சம், சோக அனுபவங்கள், போன்று நம்மைத்தளர வைக்கும் கட்டுகளை அறுத்தெறிந்து, நம்பிக்கையை இறக்க விடாமல், வாழ்வுக்குத் திரும்புங்கள். இதயத்தில் சுமைகளையும் துன்பங்களையும் தாங்கிக் கொண்டிருக்கும் ஒவ்வொருவரும், இயேசுவை நோக்கி அவைகளைத் திறந்து, அவர் அன்பினைக் கண்ணாடி ஒளியில் பெற்று, அதனை நம் வாழ்வின் நடவடிக்கைகளிலும் வார்த்தைகளிலும் பிரதிபலிப்போம்.

பாவிகளாயிருக்கும் நாம் அனைவரும், கடவுள் நம்மை மன்னிப்பதுபோல், நாமும் ஒருவர் ஒருவரை மன்னிக்க வேண்டும்.

‘திருச்சிலுவை மரம் இதோ! இதிலேதான் தொங்கியது உலகத்தின் மீட்பு’ என்று இன்றைய பெரிய வெள்ளியின் முழு அர்த்தமும் சிலுவையில்தான் அடங்கியுள்ளது என்று இன்றைய நாளை மீட்பின் நாளாகவும், தியாகத்தின் நாளாகவும் அனுஷ்டிக்கின்றோம்.

தன்னைப் பலியாக்கியதன் மூலம் அவரே பலிப்பொருளாகவும் அவரே பலிப்பீடமாகவும் அவரே பலியாகவும் இவ்வுலகுக்குத் தன் அன்பைக் காட்டிய பெறுமதிமிக்க நாளாகும். ‘தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட, சிறந்த அன்பு யாரிடமும் இல்லை’ (யோவான் 15:13), என்று இவ்வுலகில் அன்பே தலை சிறந்தது என்று மெய்ப்பித்துக் காட்டிய முன்னுதாரண நாள் இதுவாகும். இயேசுவின் பாடுகள் எமக்கு வாழ்வின் அர்த்தத்தை காட்ட வல்லன. அவரது இரத்தம் எமக்கு மன்னிப்பின் பானமாக மாற வல்லது.

இயேசுவின் இறப்பு எமக்கு மீட்பைத் தரவல்லது. இன்றைய பெரிய வெள்ளிக்கிழமை வழிபாடு நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது.

முதல் பகுதி, இறைவாக்கு வழிபாடாகும். இரண்டாம் பகுதி, பொது மன்றாட்டாகும்.

மூன்றாம் பகுதி, திருச்சிலுவை ஆராதனையாகும். நான்காம் பகுதி, திருவிருந்தாக இடம்பெறும்.

திருச்சபைக்குத் தேவையான அருள் ஆசீர்கள் அனைத்தும் சிலுவையில் இருந்துதான் ஊற்றெடுக்கின்றன. சிலுவையில் காணப்பட்ட பலி வாழ்வு, பணி வாழ்வாகின்றது. சிலுவையின் துன்பங்கள், வலிகள், கைவிடப்பட்டநிலைகள், இரத்தம் சிந்தும் நிலை கூட ஏன் மரணம் கூட திருச்சபையின் வாழ்வியல் நிலையாகின்றது.

அத்தோடு, சிலுவையிலே சொல்லப்பட்ட செபம், திருச்சபைக்குத் தேவையாகின்றது. அது சுகமளிக்கும் அருமருந்தாகின்றது. சிலுவையில் இயேசுவின் கண்களோடு ஏழைகளைத் திருச்சபை பார்க்க வேண்டும்; செவிமடுக்க வேண்டும்; ஆறுதல்படுத்த வேண்டும்; உருகும் இதயம் கொண்டு வாழ வேண்டும்.

இதனால் தான் சிலுவையைக் கண்ட மனிதர்கள் விலகிச் சென்றனர். ஒதுங்கிச் சென்றனர், வெறுத்தனர், அவமதித்தனர். சிலுவை ஒவ்வொருவரையும் பார்க்க வைத்தது. ஏனெனில், சிலுவையைப் பார்த்தவர்கள் தங்களை அர்ப்பணித்தனர். அவர்கள் துன்பங்களைத் தாங்கினர். வீதியிலும் வாடுவோர், மடிவோர் வாழ்ந்ததனால். அவர்கள் தங்கள் சௌகரியங்களை, நிறைவான உணவுகளை தியாகம் பண்ண வேண்டியிருந்தது ஏனெனில் பட்டினியால் வாடுவோர், வீடுகளை இழந்தோர் அவர்கள் முன்பே இருந்ததனால். இது தான் சிலுவை தரும் பாடம்.

இயேசுவின் வார்த்தைகள் எமது வாழ்வை குத்தி ஊடுருவட்டும். இயேசுவின் அர்ப்பணம் எமது வாழ்வின் நிலைகளைத் தொடட்டும். இயேசுவின் இறப்பு எமது வாழ்வுக்கு ஆதாரமாய் அமையட்டும்.

நல் எண்ணம் கொண்ட ஆண்களும், பெண்களும் தமக்குரியவற்றை இல்லாதவர் களுடன் பகிர்வதன் மூலம் ஓர் நல் உலகைக் கட்டியெழுப்ப வேண்டும். நம்மை ஏழை எளியவர்களுடன் அடையாளப்படுத்த வேண்டும். ஈகை செய்வது மனிதனை அதீத நிலைக்கு உயர்த்துகின்றது. அதேவேளை சுயநலத்துடன் பொருட்களைப் பாதுகாத்தல் தமக்கென வைத்துப் பேணுவது மனிதனை தாழ் நிலைக்குக் கொணர்கின்றது. சுயநலவாழ்வு எம்மைச் சிறைப்படுத்துகின்றது.

இறைவேண்டல், உண்ணா நோன்பு, இரக்கத்தின் செயல்களை ஆற்றுதல் ஆகியவையே தவக்காலப்பாதை எனக் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நம் இதயங்களைக் கறைப்படுத்தியிருக்கும் அனைத்துத் தூசிகளையும் அகற்றவேண்டிய தேவை உள்ளது. எப்படியெனில், இறைவேண்டல், உண்ணாநோன்பு, இரக்கத்தின் செயல்கள் போன்றவை வழியாகவே அது சாத்தியமாகும்.

மனித குலத் துன்பங்களோடு இணைந்து நடத்தல், இயேசுவைப்போல் தந்தையாம் இறைவனின் கனிவை வெளிப்படுத்துதல் அவசியம்.

ஒவ்வொருவரையும் அன்பு கூர்ந்து அனைத்தையும் பிறரன்பில் ஆற்றுங்கள். அனைத்தும் பிறரன்பிலும், ஒன்றிப்பிலும், உடன்பிறந்த உணர்வுடனும் ஆற்றப்படவேண்டும்.

அமலகுமார்

# கட்டான சம்பவத்துக்கு கடும் கண்டனம்



கட்டானாவின் ஹல்பேயில் உள்ள ஆடைத் தொழிற்சாலையின் முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் பாதுகாப்பு அதிகாரி மீது தனிநபர்கள் குழுவொன்று மார்ச் 30, வியாழக்கிழமை 2023, கொடூரமான தாக்குதலை மேற்கொண்டிருந்தது. இந்தத் தாக்குதலை வன்மையாக கண்டிப்பதோடு, பொறுப்புள்ள அதிகாரிகள் இதுகுறித்து பாரபட்சமற்ற விசாரணை மற்றும் விரைவான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூட்டு ஆடைகள் சங்கங்களின் மன்றம் (JAAF) கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஓமானிய பிரஜையான முகாமைத்துவ பணிப்பாளரின் இல்லத்திற்குள் அத்துமீறி நுழைந்த குழுவொன்று மேற்கொண்ட இந்தச் சட்டவிரோத தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதால் முகாமைத்துவப் பணிப்பாளரும் பாதுகாப்பு உத்தியோகத்தரும் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவு (SME) நிறுவனமான இந்தத் தொழிற்சாலையால் 300 மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

“ஆடைத் தொழிலில் துறையின் பாரிய அமைப்பான நான்கள், இதுபோன்ற வன்முறைச் செயல்களை வன்மையாகக் கண்டிக்கிறோம். சட்ட அமலாக்க அதிகாரிகள் விரைந்து செயற்பட்டு, சட்டத்தினை நிலைநிறுத்தவும், இந்தத் தாக்குதலைத் தூண்டியவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கவும் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இச்சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நாங்கள் எமது அனுதாபத்தை தெரிவிப்பதோடு, இந்த விவகாரம் நாட்டின் சட்டங்களின்படி அமைதியான முறையில் தீர்வுகாணும் வரை பொறுமையோடு காத்திருக்கும்படியும் கேட்டுக்கொள்கிறோம்” என கூட்டு ஆடைச் சங்கங்களின் மன்றம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ‘அத்துருகிரிய ஜெரோம்’ கைது

பாதாள கோஷ்டி நபரான ‘அங்கொட லொக்கா’வுக்கு உடந்தையாக இருந்தவரும் ஐஆர்சியுமான ‘அத்துருகிரிய ஜெரோம்’ இலங்கை விசேட அதிரடிப் படையினரால் சில தினங்களுக்கு முன் ஹோமாகம பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப் பொருள் கடத்தல் மற்றும் சில குற்றங்களுக்காக தேடப்பட்ட குறித்த சந்தேக நபரை, அத்துருகிரிய மிலேனியம் சிட்டி பகுதியில் வைத்து கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்துருகிரியவில் இடம்பெற்ற வழக்கு தொடர்பில் சந்தேக நபருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளுக்காக சந்தேக நபர் அத்துருகிரிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.



# தேசிய மரபுரிமை சின்னமாக பெயரிட தீர்மானம்

தெமோதரை ஒன்பது வளைவுப் பாலத்தை (Nine Arches Bridge) தேசிய மரபுரிமை சின்னமாக பெயரிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த பாலத்தை பாதுகாத்து, அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுர மனதுங்க தெரிவித்துள்ளார்.


**தேவை**

கடுவளையில் எங்களுடைய புனர்வாழ்வு வீட்டுக்கு சேவையாற்றுவதற்காக 50 வயதுக்கு குறைந்த பெண்கள், பெண் பணியாளர்கள் இணைத்துக்கொள்ளப்படுவார்கள். சம்பளம் 40,000 - 50,000 தொடர்புகளுக்கு: சோமகிரி உடுவாபிம்கம தொம்பே 0712 786 153 அல்லது 0777 421 420



நேரடி அரசியலில் இறங்கியமையால்

# விஷமத்தனமான அபத்த குற்றச்சாட்டுகள்

## மூத்த ஊடகவியலாளர் வித்தியாதரன் விசனம்; நிரூபிக்குமாறும் சவால்

■ நிதர்சன் வினோத்

தான் நேரடி அரசியலில் இறங்கியமையால், சில முகம் தெரியாத தரப்பினரும் பிரகிருதிகளும் தங்கள் அடையாளத்தை மறைத்துக் கொண்டு, அபத்தக் குற்றச்சாட்டுகளையும் விஷமத்தனமான - கேவலமான - புனைகதைப் பிரசாரங்களையும் முன்னெடுத்து வருகின்றனர் என்று மூத்த ஊடகவியலாளர் வித்தியாதரன் அறிக்கை ஊடாக விசனம் தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பில் வெளியிடப்பட்ட, பகிரங்க அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது: சுமார் 40 ஆண்டுகள் ஊடகப் பட்டறிவு கொண்ட நான், அரசியலில் நேரடியாக இறங்கியமையை அடுத்து, என் பெயருக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் துர்நோக்கில், சில அநாமதேய சமூக ஊடகத் தரப்புகளும், ஓர் அச்சு ஊடகங்கமும் வேண்டுமென்றே திட்டமிட்டுப் பொய்த் தகவல்களையும், ஆதாரமேயற்ற புனைகதைகளையும் பெரும் எடுப்பில் பரப்பி வருகின்றன. என் பொது வாழ்வில் இத்தகைய அபத்தக் குற்றச்சாட்டுகள் புதியவை.

யாழ். இந்து கல்லூரி மாணவர் ஒருவர் தற்கொலைக்கு முயன்றார் என்று வெளியான தகவல் தொடர்பில் விசாரணை நடத்தி வரும் யாழ். பொலிஸின் சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பான குற்ற விசாரணைப் பிரிவினர், பிரதான சந்தேக நபர் ஒருவரை அடையாளம் கண்டுள்ளனர் என அறிகிறேன். அவர் தொடர்பான சி.சி.டி.வி கமெரா பதிவுகளையும் பொலிஸார் பெற்றிருக்கிறார்கள். அந்தப் பிரதான சந்தேக நபர் எச்சமயத்திலும் கைதாகக் கூடும்.

கல்லூரி மாணவனுக்கும் கல்லூரியுடன் சம்பந்தப்படாத வெளியாள் ஒருவருக்கும் இடையில் இடம்பெற்ற சம்பவத்தை, கல்லூரியை இலக்கு வைத்து பாலியல் வலை அமைப்பு இயங்குவதாகக் குறிப்பிட்டு, கல்லூரிக்கும் நிர்வாகத்துக்கும் அபகீர்த்தி ஏற்படுத்தும் கேவல சதி நடவடிக்கையும் ஊடகத்தின் பெயரால் தொடர்ந்து அரங்கேறுவது துரதிர்ஷ்டமாகும்.

இந்தச் சம்பவம் குறித்து தங்கள் அடையாளத்தையோ பொறுப்பு கூறலையோ வெளிப்படுத்தாமல், ஊடக அதர்மத்தை பிரதிபலிக்கும் இந்தப் பிரகிருதிகளை தங்கள் செய்திக்கான ஆதாரத்தை வெளிப்படுத்தி, உண்மைத் தன்மையை நிரூபிக்கும் படியும் பகிரங்க சவால் விடுக்கிறேன்.

தங்கள் செய்தி திட்டமிட்டு பரப்பப்படும் விஷமத்தனமான வதந்தி என்பதை நன்கு அறிந்திருந்தும், 'பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன' என அடையாளத்தை உறுதிப்படுத்தாமல் வதந்திகளை அந்த ஊடகம் வெளியிடுவதும், அதை பொலிஸ் தரப்பு பார்த்திருப்பதும், இத்தகைய அதர்ம, அவதூறு, பொய்க் குற்றச்சாட்டுகளுக்கு பொலிஸ் தரப்பும் கூட பின்னணியும் காரணமுமா என்ற நியாயமான சந்தேகமும் எழுகின்றது என்று அறிக்கையில் உள்ளது.

## மின்சாரம் தாக்கி மாணவன் உயிரிழப்பு

■ செந்தூரன் பிரதீபன்

கொக்குவில் பகுதியில் மின்சாரம் தாக்கி பாடசாலை மாணவன் நேற்று முன்தினம் (05) இரவு உயிரிழந்துள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

மின்னழுத்தியை செயற்படுத்திய பொழுது, மின்சாரம் மாணவன் மீது தாக்கியுள்ளது. உயிரிழந்தவர் கொக்குவில் இந்து கல்லூரி தொழில்நுட்ப பிரிவு 2024 ஐ சேர்ந்த கிஷோத்மன் (வயது 18) என பொலிஸார் தெரிவித்தனர்.

## இரண்டாவது தடவையாகவும் எல்லைதாண்டி மீன் பிடித்தவருக்கு சிறை

■ நிதர்சன் வினோத்



எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதாகிய இந்திய மீனவர்கள் 11 பேர் விடுதலை செய்யப்பட்டு உள்ளதுடன் ஒருவருக்கு சிறைத் தண்டணை விதிக்கப்பட்டும், படகு ஒன்றும் பறிமுதல் செய்தும் ஊற்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த மார்ச் 23ஆம் திகதி எல்லை தாண்டி, அனலைதீவு கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 12 பேர், இரண்டு படகுகளுடன் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்களில் ஆறாவது சந்தேகநபர், கடந்த ஓர் ஆண்டுக்கு முன்னர் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதாகி, நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்டிருந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த ஆறாவது சந்தேக நபருக்கு கடந்த முறை நிபந்தனை விதிக்கப்பட்ட 18 மாத சிறைத்தண்டனையுடன், இரண்டாவது தடவை கைது செய்யப்பட்ட குற்றச் செயலுக்கான தண்டனையை ஏக காலத்தில் அனுபவிக்க நேர்ந்துள்ளது.

இதன்படி முதற்றடவைக்கான தண்டனையான ஆறு மாத காலமும், இரண்டாவது தடவையாக புரிந்த குற்றத்துக்கான தண்டனைக் காலமாக எட்டு மாத கால சிறைத் தண்டனை அடங்கலாக 14 மாத கால சிறைத் தண்டனையை விதித்து, ஊற்காவற்றுறை நீதவான் ஜே. கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.

மேலும், இரண்டு படகில் ஒன்றின் படகு உரிமையாளர், எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட போது, படகில் இருந்துள்ளமையால் படகு பறிமுதல் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மல்லாவி ஆதார வைத்தியசாலையில்

## மகப்பேற்றியல் மற்றும் பெண்நோயியல் சிகிச்சைப் பிரிவு

> நீண்டதூரப் பயணம் மேற்கொண்டு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைகளுக்கு செல்லும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இது மிகப்பெரிய வரப்பிரசாதம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

மல்லாவி பிரதேச மக்களின் நீண்ட கால தேவையாக இருந்த மகப்பேற்றியல் மற்றும் பெண்நோயியல் சிகிச்சை மல்லாவி ஆதார வைத்தியசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டு சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

முல்லைத்தீவு, மல்லாவி பிரதேச மக்களின் நீண்ட கால தேவையாக இருந்த மகப்பேற்றியல் மற்றும் பெண்நோயியல் சிகிச்சை, மல்லாவி ஆதார வைத்தியசாலையில் டொக்டர் வை. சிவகரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டு சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மல்லாவியில் இருந்து நீண்டதூரப் பயணம் மேற்கொண்டு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைகளுக்கு செல்லும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இது மிகப்பெரிய வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

இதனை வெற்றிகரமாக ஆரம்பித்துவைப்பதற்கு உறுதுணையாக இருந்த பிராந்திய வைத்திய அதிகாரி முல்லைத்தீவு, மற்றும் மல்லாவி பிராந்திய வைத்தியசாலையின் மருத்துவ நிபுணர் ருசாந்தினி சீவாமிர்தத்துக்கும் இதனை ஆரம்பித்து வைத்த மகப்பேற்றியல் மற்றும் பெண்நோயியல் நிபுணரான டொக்டர் சிவகரனுக்கும் மல்லாவி ஆதார வைத்தியசாலையின் ஏனைய மருத்துவர்கள் மற்றும் ஊழியர்களுக்கும், வைத்தியசாலை சார்பாக நன்றிகளைப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இரணைமடு குள புனரமைப்பில் குறைபாடுகள்

## தண்ணீர் திறக்காத நிலையிலும் நீர் வெளியேறுகிறது



■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடுக்குளம் சுமார் 3,000 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டுள்ள போதும், அதன் புனரமைப்பு பணிகளில் பல்வேறுபட்ட குறைபாடுகள் காணப்படுகின்றன.

இந்த நிலையில், குளத்தில் உள்ள நீர், தற்போது நீர் பாசன கால்வாய் ஊடாக வெளியேறி வருகின்றது. அதாவது, சிறுபோக செய்கைக்கு தண்ணீர் திறந்து விடப்படாத நிலையில், தண்ணீர் வெளியேறிக் கொண்டிருக்கிறது.

நாளாந்தம் பெருமளவான நீர் வாய்க்கால் வழியாக வெளியேறி, கழிவு நிலங்களிலும் விவசாய நிலங்களிலும் தேங்கிக் காணப்படுகின்றன. இவ்வாறு குளத்தின் புனரமைப்பு பணிகளில் உள்ள குறைபாடு காரணமாகவே, தண்ணீர் வெளியேறி வருவதாக விவசாயிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

# ரயில்வே கடவை ஊழியர்கள் கவனயீர்ப்பு போராட்டம்

## எட்டு மணித்தியால பணி; மாதம் 7,500 ரூபாய் மாத்திரமே சம்பளம்

■ ஆர். ஜெயஸ்ரீராம்



கடந்த 10 வருடத்துக்கு மேலாக ரூபாய் 250 இற்கு சேவையாற்றும் எங்களுக்கு, இனியும் காலம் தாழ்த்தாது ரயில்வே திணைக்களத்தில் நிரந்தர நியமனம் தருமாறு கோரி, ரயில்வே கடவை ஊழியர்கள் நேற்று (06) வாழைச்சேனை ரயில் நிலையத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வாழைச்சேனை ரயில் நிலையத்தில் ஒன்று கூடியவர்கள், தங்களது கோரிக்கை அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தியவாறு, வாழைச்சேனை - கொழும்பு வீதி வழியாக ஊர்வலமாகச் சென்று வாழைச்சேனை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக, 'அரசே நிரந்தர நியமனத்தை தா'; 'சம்பளத்தை அதிகரித்துத் தா' போன்ற கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, தங்களது கோரிக்கை அடங்கிய மகஜரை, பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் சீ. யோகேஸ்வரன், வாழைச்சேனை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஆகியோரிடம் கையளித்தனர்.

மகஜரை பெற்றுக்கொண்ட பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர், இதற்கான தீர்வை சம்பந்தப்பட்ட போக்குவரத்து அமைச்சர், மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்துக்குக் கொண்டுவந்து பெற்றத்தருவதாகத் தெரிவித்தார்.

மேற்படி வாழைச்சேனை பொலிஸ் நிலையத்துக்குப் பொறுப்பான 26 ரயில்வே கடவையில் 78 பேர் கடமையாற்றி வருகின்றனர். நாளொன்றுக்கு எட்டு மணித்தியாலம் பணியாற்றி மாதாந்த சம்பளமாக ரூபாய் 7,500 பொலிஸ் திணைக்களத்தால் வழங்கப்பட்டு வருகிறது. இன்றைய விலைவாசிகளின் அடிப்படையில், இந்தச் சம்பளத்தைக்கொண்டு தங்களது வாழ்வாதாரத்தை மேற்கொள்ளமுடியாது என்று கவலையுடன் ரயில்வே கடவை ஊழியர்கள் கூறுகின்றனர்.

## மட்டக்களப்பில் வெவ்வேறு சம்பவங்களில் மூன்று பேர் கைது

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவில் உள்ள வெவ்வேறு பிரதேசங்களில் வெவ்வேறு சம்பவங்களான கோவிலில் இரும்பு கம்பி திருடியமை, சைக்கிள் திருடியமை, மாமனாரை கோடரியால் கொத்தியமை போன்ற சம்பவங்களுடன் தொடர்புடைய மூன்று பேரை புதன்கிழமை (05) இரவு கைது செய்துள்ளாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஊறணி, கொத்துக்குளம் மாரியம்மன் ஆலையத்துக்குள் உள்நுழைந்த திருடன், அங்கு கோபுர கட்டட புனரமைப்புக்காக வைக்கப்பட்டிருந்த இரும்பு கம்பிகளை திருடிக் கொண்டு இருந்தபோது, காவலாளி பொலிஸாருக்கு தகவல் தெரிவித்ததையடுத்து, திருடன் கையும்மெய்யுமாக பிடிபட்டான். நாவற்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞனை பொலிஸார் மடக்கிப் பிடித்ததுடன் 10 இரும்பு கம்பிகளையும் மீட்டனர்.

அதேவேளை, சீலாமுனை பகுதியில் சைக்கிள் திருட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கூளாவடி பிரதேசத்தைச் சோந்த 60 வயதுடைய ஒருவரை கைது செய்ததுடன் அவரிடமிருந்து திருடப்பட்ட இரண்டு சைக்கிள்களும் மீட்கப்பட்டன.


இதேவேளை, புதூர் பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை (04) மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் காரியாலயத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்ற 65 வயதுடைய மாமனாரை, கோடாரியால் கொத்தி தாக்குதல் நடத்திவிட்டு தலைமறைவாகி வந்த 44 வயதுடைய மருமகனை கைது செய்தனர்.



## பிரம்மோற்சவம்

திருக்கோணேஸ்வரப் பெருமானின் வருடாந்த பிரம்மோற்சவம் நேற்று முன்தினம் (05) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

(படங்கள்: அ. அச்சுதன்)



பொலன்னறுவையில் இருந்து காத்தான்குடிக்கு

## கடத்தப்பட்ட ஆறு எருமை மாடுகள் மீட்பு

■ கனகராசா சரவணன்



பொலன்னறுவை, கிரித்தலை பிரதேசத்தில் இருந்து காத்தான்குடி பிரதேசத்துக்கு லொறியில் சட்டவிரோதமாக எருமை மாடுகளை கடத்திச் சென்ற ஒருவரை காத்தான்குடி கடற்கரை வீதியில் வைத்து நேற்று (06) அதிகாலை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்ததுடன் ஆறு எருமை மாடுகளையும் லொறி ஒன்றையும் மீட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட குற்ற விசாரணப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து, மாவட்ட குற்ற விசாரணப் பிரிவு பொறுப்பதிகாரி, உபபொலிஸ் பரிசோதகர் டிலங்கவெலவின் ஆலோசனையில் சப்இன்பெக்ஸ்டர் ஆர்.எம்.ஆர் சதுரங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர், சம்பவதினமான நேற்று அதிகாலை காத்தான்குடி கடற்கரை வீதியில் வைத்து குறித்த லொறியை மடக்கிபிடித்து சோதனையிட்டனர்.

இதன் போது லொறியில் ஆறு எருமை மாடுகளை கடத்தியமைக் கண்டுபிடித்து லொறியின் சாரதியை கைது செய்ததுடன் ஆறு மாடுகளையும் லொறியையும் மீட்டனர்.

## களப்பரிசோதனையும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையும்



■ நூருல் ஹுதா உமர்

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம் றிபாஸின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு உட்பட்ட சாய்ந்தமருது, அட்டாளைசேனை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு போன்ற சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பிரதேசங்களில் களப்பரிசோதனையும், டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நேற்று (06) ஆரம்பித்த இந்த நிகழ்வானது எதிர்வரும் 10 திகதி வரை இடம்பெறவுள்ளது. சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இடம்பெற்ற களப்பரிசோதனை மற்றும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையில் கல்முனை பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஏ.சீ.எம் பசால் நேரடியாக விஜயம் செய்து ஆய்வை மேற்கொண்டார்.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஜே.கே. எம் அர்சத் காரியப்பரின் பணிப்பின் பேரில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பொதுச்சுகாதார பரிசோதகர் எம்.என்.எம். பைலான் தலைமையிலான பொதுச்சுகாதார பரிசோதகர்கள், ஏனைய பிரதேசங்களை சேர்ந்த பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சாய்ந்தமருது இளைஞர் சேவை அதிகாரி எம்.எம். ஷமீலுள் இலாஹி, டெங்கு கட்டுப்பாட்டு உதவியாளர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், சாய்ந்தமருது இளைஞர் கழக சம்மேளன பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.





ஆசிரியர்கள் விவகாரத்தில்

# “நடவடிக்கை எடுப்பேன்”

## பிரச்சினை காணப்பட்டாலும் பொறுத்துக் கொள்ளவேண்டும்

■ டி.ஷங்கீதன், இரா.யோகேசன்

அதிபர்களும், ஆசிரியர்களும் என்ன பிரச்சினை காணப்பட்டாலும் அதனை பொறுத்துக்கொண்டு பிள்ளைகளுக்காகவும், நாட்டுக்காகவும் சேவையாற்ற வேண்டும் என மாகாண கல்விப்பணிப்பாளர் அமரசிறி பியதாச ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் ஹட்டன் கல்வி வலயம் இணைந்து ‘அபியச’ எனும் தொனிப்பொருளில் நடமாடும் சேவையொன்று வியாழக்கிழமை (06) திகதி ஹட்டன் ஸ்ரீபாத சிங்கள மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் ஒழுங்கு செய்திருந்தன. இந்த நிகழ்வில் ஒழுங்கு செய்யப்பட்ட ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், மத்திய மாகாணத்தில் நகர்புற பாடசாலைகளில் பலர் 10 வருடங்களுக்கும் மேலாக கடமையாற்றுகின்றனர். இன்னும் சிலர் மேலதிகமாக உள்ளனர்.

ஆகவே, இடமாற்ற சபைகள் ஊடாக அவர்களை அப்பாடசாலையிலிருந்து எடுத்து, ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்ற பாடசாலைகளுக்கு வழங்க உள்ளதாகவும், அதி கஷ்ட பாடசாலைகளில் சேவையாற்றிய ஆசிரியர்களுக்கு நகர் பாடசாலைகளில் சேவையாற்ற சந்தர்ப்பம் ஏற்படுத்தி கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கடந்த வருடம் வீழ்ச்சி கண்ட ஹட்டன் கல்வி வலயத்தையும் மத்திய மாகாணத்தில் பின்னடைந்த ஏனைய வலயங்களையும் கல்வியில் முன்னேற்றம் காண்பதற்கு விசேட திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகவும், அதன் ஓர் அங்கமாக ‘அபியச’ என்ற நடமாடும் சேவையை நடத்தி வருவதாகவும், மாணவர்களை இனங்கண்டு அவர்கள் சிறந்த பெறுபேறுகளையும் பண்மிக்க கல்வியை பெற்றுகொள்வதற்கு ‘சில்பாலோக்க எட்லஸ்’ போன்ற கல்வித்திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

ஹட்டன் வலயக் கல்வி பணிப்பாளர் பி.ஸ்ரீதரனின் தலைமையில் நடைபெற்ற இந்த நடமாடும் சேவையின் மூலம் இடம்மாற்றம், அபிவிருத்தி, திட்டமிடல், ஒழுக்காற்று நடவடிக்கைகள், சேவை நிரந்தரமாக்கல், விடுமுறை, ஆசிரியர் விடுவிப்பு, பதவி உயர்வு உள்ளிட்ட 16 விடயங்களில் காணப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளன.

மூன்றாவது தடவையாக ஒழுக்கு செய்யப்பட்டிருந்த இந்த நடமாடும் சேவையில் மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த உதவி கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் திணைக்கள உத்தியோகஸ்தர்கள், ஹட்டன் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், அலுவலக உத்தியோகஸ்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## வாழ்த்தி வரவேற்றார்



பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவராக நியமிக்கப்பட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவர் பாரத் அருள்சாமியை, ஐக்கிய தேசிய கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான ஆனந்தகுமார், வாழ்த்தி வரவேற்றார்.

## மூன்று மாடுகளுடன் லொறி சாரதி கைது



■ ரஞ்சித் ராஜபக்ஷ

அனுமதிப்பத்திரம் இன்றி, மூன்று மாடுகளை சட்டவிரோதமான முறையில் லொறியொன்றில் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டின் கீழ், அந்த லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

நுவரெலியா பொலிஸாரால் இவர், வியாழக்கிழமை (06) கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பேவெல விலங்கு பண்ணையில், மூன்று மாடுகளை விலைக்கு கொள்வனவு செய்து, நானுஓயா நகரிலுள்ள மாடு அறுக்கும் இடத்துக்கு, கொண்டுவந்து கொண்டிருந்த போது, இரவு வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரால் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். லொறியும் பொலிஸாரின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

அந்த மூன்று மாடுகளின் கால்களையும் சந்தேகநபர் அடித்து உடைத்துள்ளார். அத்துடன், மூன்று மாடுகளை ஏற்றிச்செல்லும் அளவுக்கு அந்த லொறியில் இடவசதிகள் இல்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சாரதியை மூன்று மாடுகள் மற்றும் லொறியுடன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## மருத்துவ முகாம்



■ செ.தி.பெருமாள்

மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் மஸ்கெலியா பிரதேச சபையில் பணி புரியும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் இலவச மருத்துவ முகாம் வியாழக்கிழமை (06) நடத்தப்பட்டது.

மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி எச்.ஈ. இர்ஷாட், மருத்துவ முகாமை மாவட்ட வைத்தியசாலையில் வைத்து நடத்தினார்.

இதில், சகல ஊழியர்களின் தேகாரோக்கியம் பற்றிய சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கு மாவட்ட வைத்திய அதிகாரியால் தெளிவூட்டல் மேற்கொள்ளப்பட்டது என மஸ்கெலியா பிரதேச சபையின் செயலாளர் எஸ்.ராஜவீரன் தெரிவித்தார்.

## ‘மலையக மக்கள் சக்தி’ உதயமாகும்

■ சுதத் எச்.எம்.ஹேவா

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுத்தல் இதுவரையிலும் தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல் உள்ளிட்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ‘மலையக மக்கள் சக்தி’ எனும் பெயரில் புதிய தொழிற்சங்கமொன்று உதயமாகவுள்ளது.

மலைய மக்கள் இலங்கைக்கு வருகைதந்து 200 வருடங்கள் ஆகிவிட்டது. எனினும், அம்மக்களுக்கு காணி அதிகாரம் இல்லை. ஆகையால் அம்மக்களுக்கு காணி அதிகாரத்தை பெற்றுக்கொடுத்தல், கல்வியை மேம்படுத்தல் முக்கியமானது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய தொழிற்சங்கத்தின் தலைவராக ராமன் செந்தூரன், அதன் பொதுச் செயலாளர் திருமதி தியாகராஜா ஜெயலலிதா, துணைத் தலைவர் எஸ். சண்முகப்பிரியா, பிரதிச் செயலாளராக சின்னகருப்பன் விமலநாதன், பொருளாளராக தியாகராஜா சுதர்ஷனி ஆகியோர் கடமையாற்றுவர்.

## அகற்றாமையால் முகம் சுளிக்கின்றனர்

■ சுதத் எச்.எம்.ஹேவா



ஹட்டன் பிரதான பஸ் நிறுத்துமிடத்தில், சில இடங்கள் கடும் அசுத்தமாக காணப்படுகின்றது. இதனால், பஸ் பயணிகள் உள்ளிட்ட பலரும் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

அங்கு குப்பைகள் முறையாக அகற்றப்படுவதில்லை. இதனால் துர்நாற்றம் வீசுகின்றது. அவ்விடங்களில் நீண்டநேரம் நிற்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் பஸ் சாரதிகளும் நடத்துநர்களும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் அவ்வப்போது மழை பெய்வதால், நுளம்புகளின் பெருக்கமும் ஈக்களின் பெருக்கமும் அதிகரித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.







## மஹா கும்பாபிஷேகம்

நுவரெலியா, ஹட்டன் எபோட்சிலி மாஸ்க் பிரிவின் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் மிகப் பிரம்மாண்டமாக இடம்பெற்றது.
ஹட்டன் பகுதியை சூழவுள்ள பக்தர்கள் ஏராளமானோர் புடைசூழ கலந்து கொண்ட இந்நிகழ்வில், தோட்ட நிர்வாகத்தினர், ஆலய பரிபாலன சபையினர் உட்பட கும்பாபிஷேகம் செய்ய வந்த அனைத்து குருமார்களும் கௌரவிக்கப்பட்டனர்.

நீலமேகம் பிரசாந்த்










## வருடாந்த பரிசளிப்பு

இரத்தினபுரி தமிழ் ஆரம்ப வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா, இரத்தினபுரி சிவன் கோவில் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற போது போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பாடசாலை ஆசியர்களுக்கும் பிரதம அதிதியான இரத்தினபுரி கோட்டக் கல்வி பணிப்பாளர் எம்.பி. பிரசன்ன வீரசேகர பரிசில் வழங்கி கௌரவிப்பதையும் விழாவில் கலந்து கொண்டவர்களில் சிலரையும் படங்களில் காணலாம்.

உமாமகேஷ்வரி

# பழைய பல்லவியை கோரஸாக பாடும் முதலாளிகள்; ஜனாதிபதி தாளம்போடக் கூடாது

பழைய நாடகங்களை பார்க்கும் போது, அதில் 'கோரஸ்' பாடுவது ஓர் இனிமையாகதான் இருக்கும். நாடகங்கள் என்றாலே நடிக்கத் தெரிந்திருக்க வேண்டும். நமது நாட்டைப் பொறுத்தவரையில், அரசியல்வாதிகளுக்கு அடுத்த இடங்களில் முதலாளிகள் இருக்கின்றனர் என்பதை மீண்டும், மீண்டும் வலியுறுத்த வேண்டிய அவசியம் கிடையாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம், ஜனரஞ்ச முடிவுகளை எடுக்கவில்லை. மக்களின் மீது கடுஞ்சுமையைத் திணிக்கும் வகையிலான தீர்மானங்களையே எடுத்தது. இதனால், மக்கள் கொதித்தெழுந்தனர். எனினும், கீழ்மட்டம், மத்திய தரம் என்றெல்லாம் பிரித்துப் பார்க்காமல் சகல மட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கும் இடிக்கும் வகையிலேயே தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

எனினும், கீழ் மட்டங்களைச் சேர்ந்தவர்களே கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். இவ்வாறான நிலையில்தான், புத்தாண்டு பிறக்கவிருக்கும் நிலையில், பல பொருட்களின் விலைகளை கிடுகிடுவென அரசாங்கம் குறைத்தது. சேவைகளின் கட்டணங்களை குறைக்கும் வகையில் எரிபொருளுக்கான கட்டணங்களை குறைத்தது. 'கோட்டா'வை கூட்டியது.

இவையெல்லாம் சாதாரண மக்களுக்கு சந்தோஷமான செய்திகளாக மட்டுமே இருக்கின்றன. ஒருசிலவற்றை தவிர ஏனையவை, செய்திகளாக மட்டுமே இருக்கின்றன; விலை குறைப்பின் பலாபலன்கள் முழுமையாக மக்களை சென்றடையவில்லை என்றே சொல்லவேண்டும்.

பல முதலாளிகள் விலைகளை குறைக்கவே இல்லை. தட்டிக்கேட்கும் போது பழைய கையிருப்பு என மழுப்பிவிடுகின்றனர். இல்லையேல், விலை குறையாத பொருட்களின் பெயர்களைக்கூறி, அதுவே தங்களின் மூலப்பொருள் என விளக்கம் கொடுக்கின்றனர்.

பணத்தை மட்டுமே எந்த வகையிலாவது சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்ட ஒருசில முதலாளிகளுக்கு, சாதாரண மக்களின் வேதனைகள் புரியாது. ஜனரஞ்சகமான தீர்மானங்களை அரசாங்கம் எடுத்திருந்தாலும். அதன் பலன்களை மக்கள் அனுபவிக்கவில்லை எனில், அரசாங்கத்தின் மீது அவதூறுகள் வந்துவிழும். நிலைமையை கவனத்தில் எடுத்து, அதிரடியான சுற்றிவளைப்புகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும்.

முதலாளிகள் பலர், "பழைய கையிருப்பு", "விலை குறைந்த பொருட்கள் சந்தைக்கு வரவில்லை". "பழைய காஸ்களையே பயன்படுத்துகின்றோம்", "சீனி, பலசரக்கு பொருட்களின் விலைகள் குறையவில்லை" என்றெல்லாம் கதையளக்கின்றனர். இவற்றையே ஒரு 'கோரஸாக' வைத்துள்ளனர். அதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இடமளிக்காது, அதிரடியான நடவடிக்கையில் இறங்கவேண்டும்.

இல்லையில், மக்களின் நலன்கருதி எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரதிபலன்கள், சாதாரண மக்களுக்கு கிடைக்காமலே போய்விடும். வெறும் ஜனரஞ்சக சொற்களுக்காக மட்டுமே குறைக்கப்பட்டுள்ளன என்ற விமர்சனங்களுக்கு உள்ளாகவேண்டிய நிலைமையும் ஏற்படும்.

நுகர்வோர் அதிகாரசபையும், கடுமையான தீர்மானங்களை எடுத்து, விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாத அல்லது விலைகளை குறைக்காத வர்த்தக நிலையங்களுக்கு எதிராக, கடுமையான முறையில் சட்டங்களை அமல்படுத்தவேண்டும். இல்லையேல், விலைக்குறைப்பின் சுவையை ஒருதரப்பினர் மட்டுமே சுவைத்துக்கொண்டு இருப்பர். சாதாரண மக்கள் ஏமாளிகளாகவும் வேடிக்கை பார்க்கும் தரப்பாகவும் இருந்துவிடுவார்கள் என்பதை அரசாங்கம் நினைவில் கொள்ளவேண்டும்!


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

நினைப்புகள் உயிர் பெறலாம். அப்பொழுது எண்ணியவை கண்முன் காட்சிதரும். காலங்கள் நகரும் போது மாற்றங்கள் சர்வசாதாரணம்.

இளமையில் கண்டகண்ட கனவுகள்; இப்படியும் நிஜமாகுமா எனும் வண்ணம், பற்பல சம்பவங்கள் நடைபெறுவது ஆச்சரியமாக இருக்கும்.

நம்பிக்கைகளில் ஸ்திரமாக இருந்தால், நினைத்தவை நடந்தே தீரும். நம்பிக்கையீனம் வெற்றிகளை உற்பத்தி செய்யாது. வாழ்க்கையில் சாதனைகளைச் செய்யவே எல்லோரும் விரும்பலாம். ஆனால், நினைப்புகளைச் செயலாக்க என்ன செய்கின்றோம் என்பதை தங்களைத் தாங்களே கேள்விகேட்கவேண்டும்.

சுலபமாகக் காரிய சித்திகளை வென்றிட முடியாது. படிப்படியாக முயன்றால், காரிய வெற்றிகள் உங்களைத் தழுவும்.

நல்ல விடயங்களை வெறும் கற்பனையில் சாதிக்க முடியாது. முயலும் போது சோதனைகள் உருவாகலாம். சோதனைகளுடன் சங்கமிப்பதால், பிரயோசனம் கிடையாது. தொட்ட நல்ல காரியங்களை, செய்து முடிப்பதே முழுமையான மனிதன்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### யானை வெடிகள் வழங்குமாறு கோரிக்கை

அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்து காணப்படுகின்ற காட்டு யானைகளின் அட்டகாசத்தை கட்டுப்படுத்துவதற்கு, யானை வெடிகள் வழங்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களிலுள்ள எல்லைக் கிராமங்களிலும் பொது மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களிலும் காட்டு யானைகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இதனால் அப்பிரதேசங்களில் வாழும் மக்கள், இரவு வேளைகளில் பீதியுடன் வாழ்ந்து வருகின்றனர்.

அக்கரைப்பற்று, கல்முனை, அம்பாறை, பொத்துவில் ஆகிய நகரங்களுக்கு செல்லும் பிரதான வீதிகளில், இரவு வேளைகளில் கூட்டமாகவும் தனியாகவும் யானைகள் நடமாடுவதால், போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல்லைக் கிராமங்களில் வாழும் மக்கள் பீதியின் காரணமாக, மாலை நேரங்களில் தங்கள் குடியிருப்பை விட்டு தங்கள் குழந்தைகளுடன் வெளியேறி, பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று, காலையில் வீடு திரும்பும் அவல நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இரவு நேரங்களில் கிராமங்களுக்குள் உட்புகும் யானைகள் கூட்டம், வீட்டுத் தோட்டங்களையும், சேனைப் பயிர்களையும் சேதப்படுத்தி வருவதால் விவசாயிகள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்படும் காட்டு யானைத் தொல்லையை கட்டுப்படுத்துவதற்கு யானை வெடிகளை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

எம்.எஸ்.எம் ஹனீபா

வலது தீவிரவாதத்தின் நிழலில் – 22

# இலத்தீன் அமெரிக்க அதிவலது: கெடுபிடிப்போரில் அறுவடை செய்தல்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இலத்தீன் அமெரிக்க அதிவலதின் இருப்புக்கு 1930களில் ஸ்பெயினில் சர்வாதிகாரி ஃபிராங்கோவின் எழுச்சி முக்கிய உந்து சக்தியாக இருந்தது. இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பாதியில் நவீனமயமாக்கல், அதிவலதுக்கு நெருக்கடியை உருவாக்கியது.

ஃபிராங்கோவின் எழுச்சியைத் தொடர்ந்து வந்த தசாப்தங்களில், அதிவலது சக்திகள் தங்கள் ஐபீரிய நாயகர்களிடம் இருந்து (ஸ்பெயினின் ஃபிராங்கோ மற்றும் போத்துகல்லின் சலாசர்) தார்மிக மற்றும் நிதிரீதியான ஆதரவைப் பெற்றனர்.

இரண்டாம் உலகப் போரின் முடிவில், அனைத்து பாசிசத்தையும் நசுக்கியதாக நேச நாடுகள் சொல்லிவந்த போதும், ஸ்பெயினிலும் போத்துக்கல்லிலும் 1970கள் வரை பாசிச சர்வாதிகாரம் நீடித்தது. அது அதிவலது கத்தோலிக்க அமைப்புக்கான உலகளாவிய மையமாக மாறியது.

இந்த இரு நாடுகளிலிருந்தும் பழைமைவாத பாதிரியார்கள், கல்வியாளர்கள், வெளியீடுகள், இராஜதந்திரிகள் மற்றும் கண்காட்சிகள் 'கலாசார பரிமாற்றம்' என்ற பெயரில் இலத்தீன் அமெரிக்காவுக்குள் நுழைந்தனர். அவை அந்நாடுகளில் அதிவலதின் செயற்பாடுகளை ஊக்குவித்தன.

வாக்குரிமையோ, அரசியல் கட்சிகளோ, மனித உரிமைகளோ இல்லாத ஆரம்பகால நவீன சமுதாயத்தின் ஏக்கம் நிறைந்த பார்வையில் தங்கியிருந்த பிராங்கோயிஸ்ட் கதையாடலானது, நவீன ஜனநாயகத்தின் குழப்பமான கோரிக்கைகளை விரைவில் கைவிடக்கோருவோருக்கு ஸ்பெயினை ஒரு பயனுள்ள குறியீட்டுப் புள்ளியாக மாற்றியது.

எந்த வகையான அரசியல் ஆட்சியும் 'கம்யூனிசம்' அல்லது அதை நோக்கி நகர்த்தக்கூடிய எதையும் விட விரும்பத்தக்கது என்ற பார்வையை பொதுப்புத்தி மனநிலைக்கு அளித்தது. அதேவேளை தேவாலயம், இராணுவம் மற்றும் பிரபுக்களின அதியுயர்நிலை ஆகிய மூன்று நிறுவனத் தூண்கள் மீதான தாக்குதலாகக் கருதப்படும் எதுவும் அழிக்கப்படுவதற்குத் தகுதியானது என்பதை நியாயப்படுத்தியது.

கெடுபிடிப்போர் காலம் முழுவதும் இலத்தீன் அமெரிக்காவெங்கும் அமெரிக்காவால் நிதியளிக்கப்பட்டு பிரதான ஆயுதமாக்கப்பட்டு, அரசியல் வன்முறையைப் பிராந்தியம் முழுவதும் தூண்டியது. பல ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சிகள், முறியடிக்கப்பட்டாலும் அல்லது வெற்றி பெற்றாலும் அவை ஸ்பானிய உள்நாட்டுப் போரின் வலதுசாரி தொன்மங்களை வெளிப்படையாக வரைந்தன.

உதாரணமாக, குவாத்தமாலாவில் 1954இல், மதகுருமார்கள் விசுவாசிகளை அணிதிரட்டி ஜாகோபோ ஆர்பென்ஸை பதவியை விட்டு விரட்டுவதை 'மீள்வெற்றிகாணல்' என்று அழைத்தனர். பொலிவியாவில், 1959இல், ஸ்பெயினின் புரட்சிகர அரசாங்கத்தை தூக்கியெறிய முயன்று இறந்தவர்கள் நினைவாக, பொலிவியன் சோசலிஸ்ட் ஃபாலாஞ்சை நிறுவினார் ஆஸ்கார் உன்சாகா டி லா வேகா.

ஃபிராங்கோ ஆட்சியின் பெண்களின் கீழ்ப்படிதல், பாலினம், பாலியல் இணக்கமின்மையின் கடுமையான அடக்குமுறை ஆகியவை பிரேஸிலில் எதிரொலித்தன, அங்கு இருபது ஆண்டுகால சர்வாதிகார ஆட்சி, பாலினம் மற்றும் பாலியல் இணக்கமற்ற தன்மையை சமன் செய்து, கிறிஸ்தவ தார்மிகச் சிதைவை இராணுவ ஆட்சியால் மட்டுமே நிறுத்த முடியும் என்று வாதிட்டது.

அர்ஜென்டினாவின் இராணுவ சர்வாதிகாரம் 1970 களின் நடுப்பகுதியில் 'புனிதப் போர்' என்ற கருத்தை அதிகமாகப் பயன்படுத்தினர். இடதுசாரிகளின் வெகுஜனக் கொலைகளை புனிதப்படுத்த 'ஜேசுவுக்காக' என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்தினார்கள்,

அதேநேரத்தில் அண்டை நாடான சிலியில், கத்தோலிக்க புராணங்கள் மற்றும் புகழ்பெற்ற ஹிஸ்பானிக் கலாசாரக் கருத்துகளில் மூழ்கியிருந்த கிரேமலிஸ்டா சிவிலியன் எதிர்ப்பு இயக்கம், சால்வடார் அலெண்டேவின் சோசலிச அரசாங்கத்தை அகற்றுவதில் மையமாக இருந்தது.

எல்-சால்வடாரில், 1970களின் நடுப்பகுதியில், ஒரு கொலைக் குழுவானது, ஃபாலாஞ் என்ற சுருக்கத்தை உருவாக்குவதற்காக, அதன் முன்னெழுத்துகளைக் கொண்ட அசாத்தியப் பெயரைத் தனக்கு உருவாக்கிக் கொண்டது.

தொழிற்சங்க செயற்பாட்டாளர்களை சித்திரவதை செய்தல், மாணவர்களை விமானத்தில் இருந்து கடலில் வீசுதல், பழங்குடி சமூகங்களை படுகொலை செய்தல் போன்ற பல வழிகளை இந்த அதிவலது ஆட்சிகளும் குழுக்களும் இலத்தீன் அமெரிக்காவில் அமெரிக்காவின் ஆசீர்வாதத்துடன் கண்டுபிடித்தன. இவை ஒழுங்கமைக்கப்பட்ட தொழிலாளர்களின் அழிவு, தேவையான விவசாய சீர்திருத்தங்களை இடைநிறுத்துதல் அல்லது மாற்றியமைத்தல், தேவாலயத்துக்குள் முற்போக்கான போக்குகளுக்கு தண்டனை வழங்குதல், பலவீனமான, திணிக்கப்பட்ட கட்டமைப்பு மாற்றங்களை எதிர்த்துப் போராடக்கூடிய சமூக இயக்கங்களை அகற்றுதல் போன்றவற்றை சாதித்தன.

இன்றைய மத்திய மற்றும் தென் அமெரிக்கச் சந்தைகளை பிரதான வணிக வாய்ப்புகளாகக் கூறும், சுரண்டும் சர்வதேச முதலீட்டாளர்கள் பல தசாப்தங்களாக நடைமுறைப்படுத்தப்பட்ட பழைமைவாத அடக்குமுறைக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். எளிமையாகச் சொன்னால், இலத்தீன் அமெரிக்கா இன்று உலகின் மிகவும் சமத்துவமற்ற பிராந்தியமாக இருப்பது ஒரு விபத்து அல்ல.

1990களின் இறுதியில் அதிவலது சர்வாதிகார ஆட்சிகளின் சரிவு இலத்தீன் அமெரிக்கா எங்கும் தொடங்கியது. இது இளஞ்சிவப்பு அலை என்று அறியப்பட்டது. சந்தையின் புதிய தேவைகளுக்காக உருவாக்கப்பட்ட சிக்கன நடவடிக்கைகளுக்கு எதிர்வினையாக இது தோற்றம் பெற்றாலும் அது கடந்தகால இரத்தத்தில் நனைந்த பிற்போக்குத்தனமான தசாப்தங்களின் மறுதலிப்பாகவும் இருந்தது.

இது சிலியின் மைக்கேல் பேச்லெட், பிரேஸிலின் தில்மா ரூசெஃப் போன்ற முன்னாள் சித்திரவதைக்கு ஆளானவர்களின் உயர்வின் அடையாளமாவும் அவர்களை நாட்டின் தலைவர்களாகக் கொண்டு வந்தது. வேரூன்றிய அதிகாரக் கட்டமைப்புகளை அகற்றுவதில் புரிந்து கொள்ளக்கூடிய தோல்விகளை இந்தப் புதிய அரசாங்கங்கள் கண்டபோதும், இளஞ்சிவப்பு அலை ஒரு புதிய சகாப்தத்தின் உதயத்தை பரிந்துரைத்தது.

பிரேஸிலின் லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வாவைப் போலவே, புத்துயிர் பெற்ற வெகுஜன அமைப்புகள் தங்கள் தலைவர்களை அரசியல் அதிகாரத்துக்குள் தள்ள முடியும். அர்ஜென்டினா போன்ற சர்வதேச கடன் வழங்குனர்களுக்கு மிகவும் ஆழ்ந்த நம்பிக்கையுள்ள நாடுகள் சர்வதேச நாணய நிதியத்தின் கடனின் தளைகளை தூக்கி எறியலாம். பொலிவியா போன்ற பெரும்பான்மையான பழங்குடி சமூகங்கள், நவீன அரசை பன்முகத்தன்மை கொண்டதாக மறுவரையறை செய்யத் துணிந்த ஒரு பூர்வகுடி ஜனாதிபதியால் ஆளப்படலாம் போன்றவற்றைக் காட்டி நின்றது.

இந்தக் கட்டத்தின் ஆரம்ப ஆண்டுகளில் தீவிர வலதுசாரிகள் ஒப்பீட்டளவில் அமைதியாக இருந்தபோதிலும், இளஞ்சிவப்பு அலை வீசிய நாடுகள் எதிர்கொண்ட பெருகிய சவால்கள் - பண்டங்களின் விலை வீழ்ச்சி, ஊழல், அமெரிக்க தலையீடு, பிரித்தெடுக்கும் தூண்டுதலின் பிரித்தெடுத்தல் - வேலைநிறுத்தம் செய்வதற்கான வாய்ப்புக்காகக் காத்திருந்தது. அதன் மூலோபாய நோக்குநிலை எப்போதும் வெற்றியடையவில்லை என்றாலும், அடிப்படையில் அதிவலது பல முயற்சிகளை மேற்கொண்டது.

எடுத்துக்காட்டாக, வெனிசுலாவின் ஹ்யூகோ சாவேஸுக்கு எதிரான 2002 ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியின் பின்னணியில் இருந்தது ஒரு பழைமைவாதக் கூட்டணியாகும். அதன் முக்கிய பங்காளியாக அதிவலது இருந்தது ஆச்சரியப்படத்தக்கவொன்றல்ல.

இளஞ்சிவப்பு அலையின் கலவையான முடிவுகள் பிரதிபலிப்பது யாதெனில், இவ்வலை வீசிய நாடுகளுக்கு எதிராக தொடர்ச்சியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதையாகும்.

அதேவேளை, இந்த அலை வீசிய நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் புரட்சிகரமானதாகவன்றி மிகவும் சீர்திருத்தவாதமாக மாறியது. உண்மையிலேயே புரட்சிகரமாக இருந்தது அடிமட்ட அடிப்படை இயக்கங்களாகும். இந்த இயக்கங்கள் காலப்போக்கில் தங்கள் செல்வாக்கை இழந்ததோடு அவர்களின் கோரிக்கைகள் கேட்பாரற்றுப் போயின.

அதிகாரத்துக்கு ஆட்சியாளர்களைக் கொண்டு வந்த இவ்வியக்கங்கள் கட்சிக் கட்டமைப்புகளில் இருந்தே அந்நியப்பட்டுவிட்டன. இதனால் பிரேஸில், ஹொண்டுராஸ் மற்றும் பராகுவேயில் நடந்த நீதித்துறை சதிகள் உட்பட, வலதுசாரி சவால்களில் இருந்து இளஞ்சிவப்பு அலையில் ஆட்சிக்கு வந்தோர் தங்களைத் தற்காத்துக் கொள்ள இயலாமல் போனது.

அடித்தட்டு மக்கள் இயக்கங்களில் இருந்து அந்நியப்பட்டவையாக குறித்த ஆட்சிகள் மாறியிருந்தன. அடித்தட்டு மக்கள் இயக்கங்கள் உயிர்ப்போடு இருந்திருக்குமாயின் அதிவலதின் சதிகள், ஆட்சிக்கவிழ்ப்புகளை முறியடித்திருக்க இயலும். இளஞ்சிவப்பு அலையின் விளைவால் பெறப்பட்ட சில வெற்றிகள், வரலாற்று ரீதியாக ஓரங்கட்டப்பட்ட தொகுதிகளுக்கு அதிகாரமளிப்பதை உள்ளடக்கியது.

லூலாவின் கீழ் பிரேஸிலின் உயர்கல்வி அமைப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட தீவிரமான உறுதியான செயற்றிட்டங்கள் மற்றும் ஓரினச்சேர்க்கையாளர் திருமணங்களை சட்டப்பூர்வமாக்கும் பிராந்தியத்தின் அலை ஆகியவை இதற்குச் சான்றாகும்.

1990வரை இலத்தீன் அமெரிக்காவில் அதிவலது மிகுந்த செல்வாக்குடன் இருந்தது. கெடுபிடிப்போர் அதற்கு மிகுந்த வாய்ப்பானது. 1990களின் இறுதியில் அதிவலதுக்கும் அமெரிக்க ஏகாதிபத்திய நலன்களுக்கும் எதிராக இலத்தின் அமெரிக்க மக்கள் எழுந்தார்கள். அது இளஞ்சிவப்பு அலையானது. ஆனால் 2000இன் இறுதியில் அமெரிக்கா அதிவலதின் துணையோடு திருப்பித் தாக்கியது.

# SLT-MOBITEL 'Hosting Cub' ஊடாக hosting சேவைகள்

நுண், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களுக்கு (MSMEs) வளர்ச்சி மற்றும் வினைத்திறனை மேம்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை புரிந்து, தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLT-MOBITEL, தனது Hosting Cub பகிரப்பட்ட Web Hosting சேவையை வழங்கி, அத்தியாவசிய hosting தேவைகளை நிவர்த்தி செய்கின்றது.

MSMEகளுக்கு SLT-MOBITEL இனால் hosting வசதிகள் சகாயமான விலை இலகுவான விரிவாக்க வசதியுடனான MSMEs சைபர் பிரசன்னம் மற்றும் இதர பெறுமதி சேர்க்கப்பட்ட சலுகைகள் போன்றன பகிரப்பட்ட Hosting மற்றும் Virtual Private Server (VPS) தீர்வுகள் போன்றன வழங்கப்படுகின்றன.

Hosting க்கிற்கு மிகவும் சிக்கனமான தெரிவாக பகிரப்பட்ட Hosting proposal அமைந்துள்ளது. server பராமரிப்புக்கான ஒட்டுமொத்த செலவு பகிரப்படுவதுடன், சிறிய இணையத்தளங்கள் மற்றும் blogகள் போன்ற அதிகளவு bandwidth அவசியமில்லாத குறைந்த பிரவேச இணையத்தளங்களுக்கு பொருத்தமானதாக அமைந்திருக்கும்.

SLT-MOBITEL Hosting Cub என்பது குறைந்த செலவில், உயர் நம்பிக்கையைப் பெற்ற பங்காளரை நாடும் MSMEகளுக்கு சிறந்த தீர்வாக அமைந்துள்ளது. SLT-MOBITEL இனால், தாம் வளர்ச்சியடைதலுக்கமைய தமது தேவைகளை மேம்படுத்திக் கொள்வதற்கான நெகிழ்ச்சித் தன்மையை வழங்குகின்றது.






2022 இல் இலங்கையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தியிருந்த

# ஆயுள் காப்புறுதி நிறுவனமாக யூனியன் அஷ்யூரன்ஸ்




2022 ஆம் நிதியாண்டில் யூனியன் அஷ்யூரன்ஸ் உறுதியான நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்துள்ளது. பிரதான பிரிவுகளில் நிறுவனம் சிறந்த வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தது, இவற்றில் தேறிய வழங்கிய கட்டுப்பணம் முன்னைய ஆண்டில் பதிவாகியிருந்த ரூ. 15.4 பில்லியனிலிருந்து ரூ. 16.7 பில்லியனாக உயர்ந்திருந்தது.

வழமையான புதிய வியாபார கட்டுப்பணங்கள் ரூ. 4.4 பில்லியன் முதல் ரூ. 4.7 பில்லியன் வரை உயர்ந்திருந்தது. வரிக்கு முந்திய இலாபம் ரூ. 2.6 பில்லியனிலிருந்து ரூ. 3.7 பில்லியன் வரை 42% அதிகரிப்பை பதிவு செய்திருந்தது. வினைத்திறனான வகையில் சொத்துக்கள் மீளமைப்பு மற்றும் உயர் வட்டி வீதங்கள் போன்றவற்றினூடாக, தேறிய முதலீட்டு வருமானம் 42% அதிகரிப்பை பதிவு செய்து ரூ. 7.5 பில்லியனாக பதிவாகியிருந்தது. அதுபோன்று, மொத்த தேறிய வருமானம் ரூ. 20.7 பில்லியனிலிருந்து ரூ. 23.3 பில்லியனாக உயர்ந்திருந்தது. மூலதன போது விகிதமான 194% ஐ பேணியிருந்ததனூடாக நிறுவனம் உறுதியான மூலதன மற்றும் திரள்வு நிலையை பேணியிருந்தது. இந்தப் பெறுமதி ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடான 120% ஐ உயர்வான தொகையாகும்.

நிறுவனத்தின் சிறந்த வளர்ச்சி தொடர்பில் யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், "பெரும் பொருளாதார சூழலில் நிலவிய நெருக்கடிகளால், முழு தொழிற்துறைக்கும் கடந்த ஆண்டு மிகவும் சவால்கள் நிறைந்ததாக அமைந்திருந்தது. எவ்வாறும், தடைகள் காணப்பட்ட போதிலும், அவற்றுக்கு வெற்றிகரமாக நாம் முகங்கொடுத்து, சிறந்த நிதிப் பெறுபேறுகளை எய்தியுள்ளோம். எமது வாடிக்கையாளர் மையப்படுத்தி வழிமுறை, டிஜிட்டல் மயமாக்கல் செயற்பாடுகள், புத்தாக்கத்தை பின்பற்றுவதற்கான அர்ப்பணிப்பு மற்றும் எமது வெற்றியீட்டும் அணியினால் உருவாக்கப்பட்டிருந்த மிகச் சிறந்த பெறுமதிகள் போன்றவற்றினூடாக, நாம் சிறந்த வருமான மற்றும் இலாபப் பெறுமதிகளை பதிவு செய்திருந்தோம். ரூ. 5.7 பில்லியன் பெறுமதியான நஷ்டஈடுகள் மற்றும் அனுகூலங்களை நிறுவனம் செலுத்தியிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 24% உயர்வாகும். காப்புறுதிதாரர்களுக்கு நாம் வழங்கும் வாக்குறுதியை தொடர்ந்து பேணுவதற்கான அர்ப்பணிப்பு இதனூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது." என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "யூனியன் அஷ்யூரன்ஸ் மீது அயராத நம்பிக்கை கொண்டுள்ள எமது வாடிக்கையாளர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். கடுமையாக உழைப்பதுடன், வாடிக்கையாளர்கள் எதிர்பார்ப்புகளை விஞ்சும் வகையில் செயலாற்றும் ஊழியர்களின் அர்ப்பணிப்புக்கும் நன்றி தெரிவிக்கின்றேன். இந்த வளர்ச்சியினூடாக, எம்மால் உறுதியான பெறுபேறுகளை எய்தக்கூடியதாக இருக்கும் என்பதுடன், 2023 மற்றும் அதற்கு அப்பால் எமது மூலோபாய முன்னுரிமைகளை வலிமைப்படுத்தி வழங்கக்கூடியதாக அமைந்திருக்கும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். நாட்டில் காணப்படும் காப்புறுதி இடைவெளியை குறைப்பதற்கு நாம் உறுதியான பங்களிப்பை வழங்கவுள்ளதுடன், இலங்கையர்களுக்கு நிதிப் பாதுகாப்பு வலைகளை வழங்குவதுடன், வாழ்க்கையை மகிழ்ச்சிகரமாகவும் நிம்மதியாகவும் அனுபவிப்பதற்கு அதிகளவு வாய்ப்புகளை வழங்குகின்றோம்." என்றார்.

மேலும், யூனியன் அஷ்யூரன்ஸ் ஆயுள் நிதியம் 2022 ஆம் ஆண்டில் 13% உயர்வை பதிவு செய்து ரூ. 48.4 பில்லியனிலிருந்து ரூ. 54.9 பில்லியனாக பதிவாகியிருந்தது. வருடத்தின் நிறைவில் மொத்த சொத்துகள் 7% ஆல் அதிகரித்து, ரூ. 70.8 பில்லியனிலிருந்து ரூ. 76.0 பில்லியனாக பதிவாகியிருந்தது. நிர்வாகத்தின் கீழான சொத்துக்களின் எண்ணிக்கை ரூ. 59.3 பில்லியனிலிருந்து ரூ. 64.4 பில்லியன் ஆக 9% வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. சந்தை மூலதனவாக்கம் 2022 ஆம் ஆண்டின் நிறைவில் ரூ. 16.4 பில்லியனை எய்தியிருந்தது.

நிறுவனத்தின் வெற்றிகரமான செயற்பாடு தொடர்பில் யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி செனத் ஜயதிலக கருத்துத் தெரிவிக்கையில், "எமது வளர்ச்சி மனநிலை, வாடிக்கையாளர் மையப்படுத்திய சேவைகள் மற்றும் செயற்பாட்டு சிறப்பு ஆகியவற்றினூடாக, தொழிற்பாட்டு சூழலில் எழுந்திருந்த சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்கக்கூடியதாக இருந்தது. தொழிற்துறையில் முக்கியமான மைல்கல் சாதனைகளை நாம் பதிவு செய்திருந்ததுடன், நிறுவனத்தின் வலிமை மற்றும் உயர்நிலையை வெளிப்படுத்தியிருந்தோம். தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக, ரூ. 1 பில்லியன் வருடாந்த புதிய வியாபார கட்டுப்பண பெறுமதியை கடந்திருந்ததனூடாக, நாட்டின் முன்னணி பாங்கசூரன்ஸ் சேவை வழங்குநர் எனும் நிலையை நாம் மீள உறுதி செய்திருந்தோம்." என்றார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், "ஒட்டு மொத்தத்தில், 2022 ஆம் ஆண்டில் நாம் பெற்றுக் கொண்ட பெறுபேறுகள் தொடர்பில் மிகவும் மகிழ்ச்சியடைவதுடன், எதிர்காலம் தொடர்பில் பெருமளவு நம்பிக்கை கொண்டுள்ளோம். எமது ஊழியர்கள், தீர்வுகள் மற்றும் செயன்முறைகளில் தொடர்ந்தும் நாம் முதலீடுகளை மேற்கொள்வதுடன், அதனூடாக எமது பங்காளர்களுக்கு நீண்ட கால பெறுமதியை ஏற்படுத்திக் கொடுப்போம்." என்றார்.

நிறுவனம் டிஜிட்டல் மாற்றியமைப்பு செய்பாடுகளில் புதிய தொழிற்துறை நியமங்களை பதிவு செய்திருந்தது. ஒரு நாளில் 91% உரிமை கோரல்களை செலுத்தியிருந்தது. கடதாசி பாவனையற்ற பிரேரணை சமர்ப்பிப்பை அறிமுகம் செய்திருந்தமை மற்றும் வினைத்திறனான டிஜிட்டல் விநியோக மூலோபாயத்தை வடிவமைத்திருந்தமையினூடாக இந்த பெறுபேறுகளை எய்த முடிந்தது. மேலும், யூனியன் அஷ்யூரன்ஸின் புரட்சிகரமான Clicklife App தொடர்ந்தும், தொழிற்துறையில் புதிய மாற்றங்களை ஏற்படுத்தியிருந்ததுடன், வாடிக்கையாளர்களின் பெறுமதியை அதிகரித்திருந்ததுடன், ஒப்பற்ற அனுபவத்தை வழங்கியிருந்தது.

சிவகங்கை

# மீண்டும் கீழடியில் ஆய்வு:

## ஆரம்பித்து வைத்தார் மு.க.ஸ்டாலின்

கீழடியில் 9ஆம் கட்ட அகழாய்வுப் பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்றைய தினம் (06) தொடங்கி வைத்தார்.

சிவகங்கை மாவட்டம் கீழடியில் கடந்த 2015ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற 8 ஆம் கட்ட அகழாய்வு பணிகளின் போது பழங்கால தமிழர்கள் பயன்படுத்திய தொல்பொருட்கள் ஏராளமாகக் கிடைத்தன.

இவை அனைத்தும் 2,600 ஆண்டுகள் பழமையானவை என ஆய்வுகளின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அகழாய்வு பணிகளின்போது கிடைத்த தொல்பொருட்கள் இந்திய மதிப்பில் 18.42 கோடி



ரூபாயில் கட்டப்பட்டுள்ள அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இவ் அருங்காட்சியகத்தைக் கடந்த மாதம் 5ஆம் திகதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து கீழடியை பொதுமக்கள் பார்வையிட்டு வருகின்றனர். இந்நிலையில், கீழடியில் 9ஆம்



கட்ட அகழாய்வு பணிகளை நேற்றைய தினம் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி வாயிலாகத் தொடங்கி வைத்தார்.

அந்தவகையில் கீழடி, அகரம், கொந்தகை என 3 இடங்களில் 9ஆம் கட்ட அகழாய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 60 லட்சம் பேரைத் தொட்ட 'அணில்'



தமிழ் திரையுலகில் முன்னணி நடிகராக வலம் வருபவர் இளைய தளபதி விஜய்.

தனக்கென மிகப்பெரிய ரசிகர்கள் கூட்டத்தை வைத்திருக்கும் இவர், எது செய்தாலும் அது அவருடைய ரசிகர்கள் மத்தியில், மிகவும் பரபரப்பாக பார்க்கப்பட்டும், பேசப்பட்டும் வருகின்றது.

அதே சமயம் விஜய் மற்றும் அவரது ரசிகர்களும் 'அணில்' என்ற பெயரினால் விமர்சிக்கப்பட்டு வருவதும் வழக்கமான ஒன்றாக மாறியுள்ளது.

அந்த வகையில் விஜய், தற்போது அதிரடியாக இன்ஸ்டாகிராம் பக்கத்தில் இணைந்துள்ளார். அவர் இன்ஸ்டாகிராம் கணக்கை ஆரம்பித்த ஒரு மணி நேரத்திலேயே லட்சத்தை தாண்டி பாலோவர்ஸ் குவிந்தனர்.

இந்நிலையில், விஜய் இன்ஸ்டாகிராம் கணக்கு தற்போது 60 லட்சம் பாலோவர்ஸ்ஸைத் தொட்டுள்ளது.

இன்னும் பாலோவர்ஸ் எண்ணிக்கையும் கிடுகிடுவென உயரும் என கூறப்படுகிறது.

மேலும், விஜய்யின் ரசிகர்கள் #ThalapathyOnINSTAGRAM என்கிற ஹேஷ்டேக் மூலம், சமூக வலைத்தளத்தில் வைரலாக்கி வருகிறனர். அதே சமயம் 'அணில் 60 லட்சம் தொட்டுவிட்டதாக' பலரும் விமர்சித்து வருகின்றனர்.

# இந்தியாவுடன் இணையும் பாகிஸ்தான்




இந்தியா - பாகிஸ்தான் இடையேயான போர் நிறுத்த ஒப்பந்தம் காரணமாக, ஜம்மு - காஷ்மீரில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டிலுள்ள 'கமான் அமன் சேது' அமைதிப் பாலம் திறக்கப்பட்டுள்ளது.

பாரமுல்லா மாவட்டத்தில் உரி செக்டரில் காலின்-டா-காஸ் நல்லாவின் நதி மீது கட்டப்பட்டுள்ள இப் பாலம் இந்தியப் பக்கத்தில் இந்தியக் கொடியையும், எதிர்புறத்தில் பாகிஸ்தான் கொடியையும் தாங்கி நிற்கின்றது.

ஜம்மு - காஷ்மீர் செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்காகவும், எல்லையோர கிராமங்களில் உள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் மற்றும் வணிக வாய்ப்புகளை வழங்கவும், இராணுவ வீரர்களின் தியாகம் மற்றும் வரலாறு குறித்து நாட்டு மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சியாக இந்திய இராணுவம் அமைதிப் பாலத்தினை திறந்துள்ளது.

டெல்லி

# சிறுவனால் சிறுமிக்கு நேர்ந்த கொடூரம்

16 வயது சிறுவன் ஒருவன் கொள்ளையடிக்கச் சென்ற இடத்தில் சிறுமியைப் பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் டெல்லியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

டெல்லியின் அசோக் விஹார் பகுதியில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டுவந்த குடும்பமொன்று அதே பகுதியில் தற்காலிக வீடொன்றை அமைத்து அதில் வசித்து வந்துள்ளனர்.

இந்நிலையில் சம்பவ தினத்தன்று அந்த வீட்டிற்குள் கொள்ளையடிக்கும் நோக்கில் சென்ற சிறுவனொருவன் வீட்டில் தனியாக இருந்த இரு சிறுமிகளைக் கண்டுள்ளான்.

இச்சூழலைப் பயன்படுத்திக்கொண்ட சிறுவன், சிறுமிகளைக் கத்தியைக் காட்டி மிரட்டி, 16 வயதான சிறுமி ஒருவரை கட்டிடத்தில் உள்ள



ஒதுக்குப்புறமான இடத்திற்கு அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்துள்ளான்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட சிறுமி இது குறித்து தனது பெற்றோரிடம் தெரியப்படுத்திய நிலையில் அவர்கள் உடனடியாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இப்புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்த பொலிஸார் குறித்த சிறுவனைக் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

விருதுநகர்

# சந்தேகம் தீர்த்து வைத்த மாணவி பலாத்காரம்



ஆபாச வீடியோவை வெளியிட்டு விடுவதாக மிரட்டி மாணவியொருவரை இளைஞர் ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் சுரேந்தர். 27 வயதான இவர் சொந்தமாக மரக்கடையொன்றை நடத்தி வந்துள்ளார்.

அதே சமயம் அப்பகுதியில் 23 வயதான இளம்பெண் ஒருவர் கல்லூரில் பி.எட் இரண்டாம் ஆண்டு கற்று வந்துள்ளார். இந்நிலையில் சம்பவ தினத்தன்று குறித்த யுவதியிடம் தனது கணினியில் சில சந்தேகம் இருப்பதாகவும் தனக்கு உதவிசெய்யுமாறும் கேட்டுள்ளார்.

இதனை நம்பி அக்கடைக்குச் சென்ற யுவதிக்கு அவர் குளிர்பானத்தில் மயக்க மருந்து கலந்து அருந்தக் கொடுத்துள்ளார். பின்னர் அவர் மயங்கியதும் அவரைப் பாலியல் பலாத்காரம் செய்து அதனை வீடியோவாக எடுத்து, குறித்த வீடியோவை இணையத்தில் வெளியிட்டு விடுவதாகக் கூறி பலமுறை அவரைப் பலாத்காரம் செய்துள்ளார்.

இந்நிலையில் இது குறித்து பாதிக்கப்பட்ட யுவதி தனது தாயாரிடம் கூற அவர் அப்பெண்ணை தனது தாய்மாமனுக்கே திருமணம் செய்து வைத்துள்ளனர்.

இதனையடுத்து திருமணத்தில் கிடைத்த மொய்பணம் 2 ,40,000 மற்றும் 11 பவுன் நகைகளைத் தன்னிடம் தரவேண்டும். இல்லாவிட்டால் தன்னோடு இருக்கும் வீடியோவை ரிலீஸ் செய்துவிடுவேன் என மீண்டும் அவரை சுரேந்தர் மிரட்டியுள்ளார்.

அச்சமடைந்த யுவதியும் அவர் கேட்ட அனைத்தையும் வழங்கியுள்ளார்.

இதனை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்ட சுரேந்தர் மீண்டும் அவரை பலாத்காரம் செய்து உள்ள நிலையில் அப்பெண்ணின் பெற்றோர் இது குறித்து பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளனர்.

இப்புகாரினையடுத்து சுரேந்தரைப் பொலிஸார் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

இஸ்ரேல்

# தொழுகையில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல்



ஜெருசலேமின் அல் அக்ஸா பள்ளிவாசலில் நேற்று முன்தினம் (05) அதிகாலை ரமலான் மாத தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது இஸ்ரேல் பொலிஸார் தாக்குதல் நடத்தியதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதில் பலர் காயமடைந்ததாக பாலஸ்தீனத்திலுள்ள செஞ்சிலுவை சங்கம் அறிவித்துள்ள நிலையில், பள்ளிவாசலுக்குள் இருந்தவர்களை இஸ்ரேல் பொலிஸார் தாக்கிய வீடியோக்களும் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

இத்தாக்குதலுக்கு பாலஸ்தீன அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. இந்நிலையில், முகமூடி அணிந்த கிளர்ச்சியாளர்கள் பட்டாசுகள், கற்களுடன் பள்ளிவாசலுக்குள் புகுந்ததால், தாங்களும் உள்ளே செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாகவும், தங்கள் மீது கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலுக்கு பதில் தாக்குதல் நடத்தியதாகவும் இஸ்ரேல் பொலிஸார் விளக்கம் அளித்துள்ளனர்.

ஸ்கொட்லாந்து




## உயிரைப் பறித்த உடல்

### என் தேவதையே தூங்கு- காதலன் அஞ்சலி

ஸ்கொட்லாந்து நாட்டைச் சேர்ந்த ஷனான் போவ் என்பவர் துருக்கியில் எடை குறைப்பு அறுவை சிகிச்சை மேற்கொள்வதற்காகச் சென்றுள்ளார்.

இதனையடுத்து அவருக்கு கடந்த சனிக்கிழமை(01) அன்று இரைப்பை பேண்ட் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. இந்த இரைப்பை பேண்ட் அறுவை சிகிச்சை என்பது உணவு உட்கொள்ளும் அளவை குறைக்க வயிற்றின் மேல் பகுதியில் போடப்படும் பட்டியாகும் ஆகும்.

இந்நிலையில் இந்த அறுவை சிகிச்சையின் போது எதிர்பாராத விதமாக ஷனான் உயிரிழந்துள்ளார்.

இது குறித்து ஷனான் போவின் காதலனான ரோஸ் ஸ்டிர்லிங் தனது காதலிக்கு பேஸ்புக் மூலமாக அஞ்சலி செலுத்தி உள்ளார். அதில் “என் தேவதையே தூங்கு”. என்றென்றும் எப்போதும் உன்னை நான் நேசிக்கிறேன்” எனப் பதிவிட்டுள்ளார்.

தெற்கு பிரேசில்

## கோடரித் தாக்குதல்; சிறார்களுக்கு அஞ்சலி



பிரேசிலின் புளூமெனா பகுதியில் உள்ள பாலர் பாடசாலை ஒன்றில் கடந்த 5 ஆம் திகதி மர்மநபர் ஒருவர் நடத்திய கோடரித் தாக்குதலில் 4சிறுவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும் 4 சிறுவர்கள் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் 25 வயதான நபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட குழந்தைகளுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் புளூமெனாவில் வசிப்பவர்கள் மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

பெரு

## பெருவில் பாயும் இரத்த ஆறு



தென் அமெரிக்க நாடான பெருவில் உள்ள குஸ்கோ பகுதியில் செந்நீர் கொண்ட ஆறொன்று உள்ளது. இது ‘புகாமாயு‘ என அப்பகுதி மக்களால் அழைக்கப்படுகிறது.

பருவமழை காலத்தில் மாத்திரம் ஓடும் இந்த ஆற்றில், ஏனைய நேரங்களில் நீர்வரத்து மிகவும் குறைவாகக் காணப்படும் எனவும் இக் காலகட்டங்களில் ஆற்றின் நிறமும் பழுப்பு நிறமாக காட்சி அளிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகாமாயோ பாயும் பகுதி கனிமங்கள் நிறைந்தது. இப் பகுதியில் இரும்பு ஒக்சைட்டின் அளவு மிக அதிகமாகவுள்ளது.

இதனால், மழைக்காலங்களில் ஆற்று நீரில் இரும்பு ஒக்சைடு மண் அதிக அளவில் கரைகிறது.

இந்த மண் அரிப்பு காரணமாக, ஆற்றின் நீரின் நிறம் பழுப்பு நிறத்தில் இருந்து சிவப்பு நிறமாக மாறுகிறது. இதுவே இவ் ஆறானாது சிவப்பு நிறத்தில் காணப்படுவதற்கு காரணமாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் ஆண்டுதோறும் இந்த ஆற்றினைப் பார்வையிட ஏராளமான மக்கள் அங்கு வருகை தருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா



## பிராங்க் செய்தவர் மீது துப்பாக்கிச் சூடு

**“ இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் ஆத்திரமடைந்த ஆலன் தனது துப்பாக்கியால் டேனர் குக்கின் வயிற்றில் சுட்டுள்ளார்**

அமெரிக்காவைச் சேர்ந்த டேனர் குக் (Tanner Cook )என்ற 21 வயதான இளைஞர் பொது மக்கள் மீது வாந்தி எடுப்பது, பல்பொருள் அங்காடியில் திருடுவது என விதவிதமாக பிராங் வீடியோக்களை எடுத்து தனது யூடியூப் சேனலில் பதிவேற்றிவருவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.

அந்தவகையில் அண்மையிலும் இதேபோது விர்ஜினியா மாநிலத்தில் உள்ள உணவகமொன்றில் ஆலன் கூலி என்பவரிடம் குறித்த இளைஞர் பிராங் செய்துள்ளார்.


இதில் இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் ஆத்திரமடைந்த ஆலன் தனது துப்பாக்கியால் டேனர் குக்கின் வயிற்றில் சுட்டுள்ளார்.

இதில் படுகாயமடைந்த கூக் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்நிலையில் ஆலனை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ரஷ்யா

## கழிப்பறை வாளியுடன் இருண்ட அறையில் புடின்



உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி உக்ரேன் மீது ரஷ்யா கடந்த ஒரு வருட காலமாக தாக்குதல் நடத்தி வருகின்றது.

அதே சமயம் உக்ரேனும் ரஷ்யா மீது பதில் தாக்குதல் நடத்தி வருகின்றது. இப்போரில் இருதரப்பில் இருந்தும் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் “ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தனது மீதமுள்ள வாழ்நாள் முழுவதையும் கழிப்பறைக்கான வாளியுடன் ஒரு இருண்ட அறையில் கழிப்பார்” எனத் தான் நம்புவதாக” உக்ரேன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இன்று மூன்றாவது போட்டி:

# தொடரை வெல்லப்போவது நியூசிலாந்தா? இலங்கையா?



இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்றாவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியானது குயின்ஸ்டௌணில் நாளை காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், முதலாவது போட்டியை இலங்கையும், இரண்டாவது போட்டியும் நியூசிலாந்து வென்ற நிலையில், இம்மூன்றாவது போட்டியானது தீர்மானகரமிக்கதாக அமையவுள்ளது.

இந்நிலையில் மீண்டுமொரு தடவை இலங்கையின் துடுப்பாட்டமே கவனம் பெறுகையில் பதும் நிஸங்கவுக்குப் பதிலாக லசித் குறொஸ்புள்ளே, நுவனிடு பெர்ணாண்டே, சதீர சமரவிக்கிரம ஆகியோரில் ஒருவர் விளையாடக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுகின்றது.

இதேவேளை பந்துவீச்சுப் பக்கமும் டில்ஷான் மதுஷங்க, கசுன் ராஜித, பிரமோத் மதுஷன் ஆகியோரை மதீஷ பத்திரண, லஹிரு குமார, டுனித் வெல்லலாகே ஆகியோரை பிரதியிடக்கூடிய வாய்ப்புகளும் காணப்படுகின்றன.

நியூசிலாந்து அணியில் கடந்த போட்டியில் விளையாடிய அதேயணியே விளையாடும் என நம்பப்படுகின்றது.

பார்சிலோனாவை வீழ்த்தி

## இறுதிப் போட்டியில் றியல் மட்ரிட்



ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான கோப்பா டெல் ரே தொடரின் இறுதிப் போட்டிக்கு றியல் மட்ரிட் தகுதி பெற்றுள்ளது.

தமது மைதானத்தில் நடைபெற்ற விலகல் முறையிலான இத்தொடரின் முதலாவது சுற்று அரையிறுதிப் போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனாவிடம் பின்தங்கியிருந்த றியல் மட்ரிட், அவ்வணியின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற இரண்டாவது சுற்று அரையிறுதிப் போட்டியில் 4-0 என்ற கோல் கணக்கில் வென்று, 4-1 என்ற மொத்த கோல் கணக்கிலேயே இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மட்ரிட் சார்பாக, கரிம் பென்ஸீமா மூன்று கோல்களைப் பெற்றதோடு, வின்ஷியஸ் ஜூனியர் ஒரு கோலைப் பெற்றார்.

ஐ.பி.எல்:

## ராஜஸ்தான் றோயல்ஸை வென்ற பஞ்சாப் கிங்ஸ்

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் (ஐ.பி.எல்), கௌகாத்தியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸுடனான போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:


நாணயச் சுழற்சி: ராஜஸ்தான் றோயல்ஸ்

பஞ்சாப் கிங்ஸ்: 197/4 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷீகர் தவான் ஆ.இ 86 (56), பிரப்ஹ்சிம்ரன் சிங் 60 (34), ஜிதேஷ் ஷர்மா 27 (16) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேஸன் ஹோல்டர் 2/29 [4], இரவிச்சந்திரன் அஷ்வின் 1/25 [4])

ராஜஸ்தான் றோயல்ஸ்: 192/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: சஞ்சு சாம்ஸன் 42 (25), ஷிம்ரோன் ஹெட்மயர் 36 (18), துரேவ் ஜுரேல் ஆ.இ 32 (15), றியான் பராக் 20 (12), ஜொஸ் பட்லர் 19 (11) ஓட்டங்கள். பந்துவீச்சு: நேதன் எலிஸ் 4/30 [4], ஹர்பிறீட் பிறார் 0/15 [2], ராகுல் சஹர் 0/31 [4])

போட்டியின் நாயகன்: நேதன் எலிஸ்

இந்நிலையில், லக்னோவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சண்றைசர்ஸ் ஹைதரபாத்தும், லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸும் மோதவுள்ளன.






மகாஜனா கல்லூரியின் இல்ல விளையாட்டு போட்டியில்

## முதலிடம் பெற்ற பாரதி இல்லம்

■ க. விஜயரெத்தினம்

மட்டக்களப்பு மகாஜனா கல்லூரி பெண்கள் தேசிய பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் விளையாட்டு போட்டியில் பாரதி இல்லம் 599 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றது.

இவ்விளையாட்டு போட்டியில் கம்பன் இல்லம் 482 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், இளங்கோ இல்லம் 295 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட அணியை

## வென்ற தமிழக இளையோர் அணி

■ செந்தூரன் பிரதீபன்




யாழ்ப்பாணத்தில் புத்தூர் வளர்மதி மைதானத்தில் முதன்முறையாக அண்மையில் நடைபெற்ற யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட அணியுடனான சிநேகபூர்வ கரப்பந்தாட்டப் போட்டியில் இந்தியாவின் தமிழ்நாடு இளையோர் அணி 25-18, 25-21, 25-23 என்ற செட் கணக்கில் வென்றது.

இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனமும், யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்த இப்போட்டியில் உலக தரவரிசை லிப்ரோ வீரர்கள் இருவர் தமிழ்நாடு இளையோர் அணியில் இடம்பெற்றிருந்தனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 07 ஏப்ரல் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.